1647

பாலர்கள்.

தொகு.2.. பகுதி 4 – 5.

Aug 1937. Sept. 1937.

1168 1104

தொகுதி 2] பகுதி 4

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

1648 1647
2237
4 - SEP 1937

ஈஸ்வர ஞூ ஆடிமீ
- AUGUST 1937 -

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதறாஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0 தனிப் பிரதியின் விலை 0—4—0

பாலர் கல்வி

தொகுதி 2	1937 ௵ ஜூலை - ஆகஸ்டு ௴ ஈஸ்வர ௵ ஆடி ௴	பகுதி 4

OFFICE OF THE REGISTR
4 - SEP 1937
சென்னை-600 008

பால ஆசிரியர்

M. S. சுந்தரேசுவரன் M. A., L. T.

யாரும் ஆசிரியராக வரலாமென்ற ஒரு நம்பிக்கை பொதுவாக இருந்து வருகிறது. அதிலும் பாலர்களுக்கு ஆசிரியராயிருப்பது மிகவும் சுலபமானதென்றும், அத்தொழிலை யாரும் செய்ய இயலும் என்றும், அதற்கு வேண்டுவன சிறிதளவு படிப்பும் போதனாமுறைப் பயிற்சியுமே என்றும் கருதப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் ஆசிரியர்கள் பிறவி ஆசிரியர்களே யல்லாது அவர்களைச் செய்ய இயலாதென ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அது உண்மையே. எனினும், மக்களனைவரும் கல்வி பயிலவேண்டுமெனக் கருதும் இந்நூற்றாண்டில் பிறவி ஆசிரியர்களைக் கொண்டு மாத்திரம் அத்தொண்டை ஆற்ற இயலாது. தற்கால ஆசிரியர்களில் பலர் பிறவி ஆசிரியர்கள் அல்லாதவர்களாகவே இருப்பார்கள். ஆகவே தான் அவர்களை அத்தொழிலுக்குத் தயார் செய்ய போதனாமுறைப் பாடசாலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இருந்தபோதிலும் சிறிது படிப்பும், போதனாமுறைப் பயிற்சியும் மாத்திரம் பால ஆசிரியர்களுக்குப் போதாது. அவர்களுக்குப் பல்வகை குணங்களும், திறன்களும் அமைந்திருக்கவேண்டும். இவை இயற்கையிலேயே இராவிடின் இவற்றைப் பெற அவர்கள் முயலவேண்டும்.

முதலாவது, தங்கள் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் சிறுவர்களும், சிறுமிகளும் நெடுங்காலப் பயிர்கள் என்பதையும், அவர்கள்மூலம் மானிட வுலகம் பெரும் பயனை யடைய இருக்கிறது என்பதையுமறிந்து, அவர்கள் இயன்றவளவுக்கு வளரத் தம்மால் கூடிய உதவி புரியவேண்டும். தம் கடன் குறித்த நேரத்தில், குறித்த பாடங்களை வகுப்புக்குப் போதிப்பது என்பதைப் பெரிதாகப் பாராட்டாமல், ஒவ்வொரு பிள்ளையும் ஓர் அம்சமாகவிருக்கும் என்பதை யுணர்ந்து, அதனதன் சக்திக்கும், விருப்பத்

பொருளடக்கம்

		பக்கம்
1.	பால ஆசிரியர் .... —M. S. சுந்தரேசவரன் M.A., L.T.	85
2.	ஆரம்பப் பள்ளிக்கூட இயற்கைப் பாடங்கள்—I .... —எஸ். ஜெகன்னாதன்	88
3.	பாலர் பாடபுத்தகங்கள் சம்மந்தமான ஓர் ஆராய்ச்சி —பி. சுப்ரமண்ய அய்யர், தியாகராய நகர்	101
4.	குழந்தைகளின் கைவேலை .... —கே. சுவர்ணவல்லி	105
5.	பத்திராதிபர் குறிப்புகள்	107

கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷேல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

147644
சென்னை-600 008.

திற்கும் ஏற்ப அபிவிருத்தி உண்டாக்க முயலுவதே அழகாகும். பிள்ளைகளின் மனோபாவத்திற்கேற்ப விஷயங்களையும், முறைகளையும் மாற்றிக்கொள்ளவேண்டும். அவர்களின் திறனுக்கேற்ப அபிவிருத்தி அடையச் செய்யவேண்டும். முன்னடைந்த பிள்ளைகளைத் தடுத்து அடக்கிவைப்பதும், பின் பற்றியிருப்பவர்களை அவசரப்படுத்துவதும் புறக்கணிப்பதும் பெருந்தவறாகும். இவ்வாறு, பிள்ளைகளின் தன்மையை யறிந்து அவர்களை வளரச் செய்வதற்கு ஆசிரியர்களிடம் அன்பு என்பது நிறைந்திருக்க வேண்டும். பிள்ளைகளுடன் எப்போதும் முகமலர்ச்சியுடன் பழகி அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டு அன்னையேபோல் நடந்துகொள்வதே ஆசிரியரின் முதல் குணமாகும்.

இரண்டாவதாக, பிள்ளைகள் பெரியோரைப் பார்த்து அவர்கள் மாதிரியே நடக்க விரும்புகிறவர்களென்பது பலரும் அறிந்த விஷயமே. விழித்திருக்கும் நேரத்தில் பெரும் பாகத்தைப் பிள்ளைகள் பாடசாலைகளில் ஆசிரியருடன் கழிப்பதால், அவரது நடையுடை பாவனைகளைப் பிள்ளைகள் கவனித்து அவ்விதமே தாமும் நடக்க முயலுவார்கள். இளமையிலிருந்தே பிள்ளைகளை நற்பழக்கங்களில் பழக்குவது அவசியமாதலால், ஆசிரியர் தம் பழக்கவழக்கங்களும், நடையுடை பாவனைகளும் போற்றத்தக்கனவாயிருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். சுத்தம், மரியாதை, பிறரிடம் அன்பு, பொதுச் சொத்துக்களில் பொறுப்பு, ஒழுங்கு, நியாயம், தெய்வ பக்தி இவ்வழியே குணங்களனைத்தும் பிள்ளைகளுக்குப் பாடசாலையின் ஒழுங்கிலிருந்து இயல்பாகவே ஏற்படவேண்டும். இவைகளைப்பற்றி ஏட்டுப் பாடம் எவ்வளவு கற்பித்தாலும் பயனில்லை.

மூன்றாவதாக, சிறுவர்கள் தாங்கள் பாடசாலைக்கு வருமுன் எம்முறையில் விஷயங்களைத் தாமே கற்றறிந்தார்களோ அம்முறையையே ஆசிரியர் பாடசாலையில் பெரும்பாலும் கையாளவேண்டும். பாடல், ஆடல், கதை சொல்லல் இவற்றில் பிள்ளைகளுக்குப் பிரியம் அதிகம். இவற்றை நாம் ஏற்ற சாதகங்களாக உபயோகித்து நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயலவேண்டும். இதிலிருந்து ஆசிரியர் இனிய குரலில் பாடக்கூடியவராயும், சிறுவர்களுக்கேற்ற பல பாடல்கள் தெரிந்தவராயும் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். இதோடுகூட, சிறுவர்களோடு சிறுவராய் நடந்துகொண்டு, அவர்களுடன் இனிமையாய்ச் சம்பாஷிக்கவும், குதூகலத்துடன் ஆடவும் கூடியவராயிருக்கவேண்டும். ஆசிரியருக்குச் சிறுவருக்கு உற்சாகத்தை மூட்டக்கூடிய பல கதைகள் தெரிந்திருக்கவேண்டும் ; அக்கதைகளைப் பிள்ளைகளுக்கு ஏற்ற வழியில் சொல்லவும் தெரியவேண்டும்.

பிள்ளைகளுக்கு இயற்கையில் அளவற்ற ஆசை உண்டு. அவர்கள், செடிகள், புஷ்பங்கள், ஆசைப்பிராணிகள் இவற்றைக்கண்டு மகிழ்கிறார்கள். அவற்றைப் பற்றிய விஷயங்களைப் பல கேள்விகள் கேட்டு அறிந்து

JL
T15m21,N361A
27.2 . 4.5

கொள்ள முயலுகிறார்கள். ஆசிரியர் இவ்வுற்சாகத்தை யடக்காமல் பெருக்கி ஏற்றவழியில் பயன் படச்செய்வதற்குச் சுற்றுப் புறத்திலுள்ள தாவரங்கள், பிராணிகள் இவற்றின் தன்மை, பழக்க வழக்கங்கள், இவை வளரும் விதம் இவற்றை நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அப்போதுதான் அவர் பிள்ளைகளின் கவனத்தைச் சரியான வழியில் செலுத்தி, உற்றுப்பார்க்கும் சக்தியைப் பெருக்கி, விஷயங்களைத் தாமே அறியுமாறு செய்ய இயலும்.

இவை மாத்திரமல்ல. ஆசிரியர் பண்டங்களை ரம்மியமான வழியில் அமைக்கவும், நிறங்களை உபயோகிக்கவும் கூடியவராயிருக்கவேண்டும். அலங்கோலமும், ஆபாசமுமான வகுப்பறை பிள்ளைகளுக்கு வெறுப்பையுண்டாக்கும். ஏற்ற சமயங்களில் சீமைச் சுண்ணாம்பால் கரும் பலகையிலும் அல்லது பென்ஸிலில், வர்ணம் இவற்றால் காகிதத்திலும் அழகிய சித்திரங்கள் வரையக்கூடியவராயு மிருக்கவேண்டும். வாய்மொழியால் விளக்கக்கூடாத விஷயங்கள் பலவற்றையும் சித்திரங்கள் மூலமாக எளிதில் விளக்கலாம். இன்னும் கைவேலைத் திறமையும் பொருந்தி யிருப்பது நலம். பலவிதமான பண்டங்களைக்கொண்டு மாதிரிகளும் உபகரணங்கள் பலவும் தாமே செய்யக்கூடியவராய் இருத்தல் நலம். இவற்றைக் கடைகளில் வாங்கிவைப்பதைவிட ஆசிரியர் செய்வதே நலம். இவர்களைப் பார்த்தும் பிள்ளைகளும் தாமும் படங்கள் வரையவும், பண்டங்கள் செய்யவும் ஆசைகொள்வார்கள். அதன் மூலமாக அவர்கள் அறிவும், திறனும் பெருகும்.

மேற்கூறியதிலிருந்து ஆசிரியர்கள் இவை தமக்குச் சாத்தியமாவென அஞ்சவேண்டியதில்லை. தொழிலில் பற்றும், அதைச் செவ்வனே புரியவேண்டுமென்ற ஆவலுமிருந்தால் எவ்விதமான ஆசிரியரும் இக்குணங்களைப்பெறலாம். மற்றெந்தத் தொண்டைக் காட்டிலும் பால ஆசிரியர்களின் தொண்டே தேசத்துக்கு மிக்க உயர்வானது என்பதை உணர்வாராயின், அவர்கள் தம் தொழிலைச் செவ்வனே செய்வாரென்பதற்கு ஐயமேயில்லை. அவ்வகையில் தொழிலை நடத்தினால் மதிப்பு, கௌரவம், செல்வம் இவை தாமே சேரும்; இவை சேராவிடினும் தாம் அரிய தொண்டைப் பழுதற ஆற்றினோமென்ற மனத்திருப்தி ஏற்படுவது திண்ணம். இத்திருப்திக்கு நிகரான லாபம் வேறொன்று மில்லை.

ஆரம்பப் பள்ளிக்கூட இயற்கைப் பாடங்கள் I

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

முன் சஞ்சிகைகளில் எண், எழுத்து இவ்விரண்டு பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்கு ஏற்ற முறைகளையும் விஷயங்களையும் குறித்துப் படித்து வந்தோம். இவ்விரண்டு முக்கிய பாடங்களைத் தவிர பொது அறிவு அபிவிருத்திக்கு வேறு சில மார்க்கங்களையும் அறிய வேண்டும். நம்மைச் சுற்றிலும் காணப்படும் இயற்கைத் தோற்றங்களையும், இயற்கைக் காட்சிகளையும் கண்டு அவற்றைப் பற்றிச் சிந்திப்பதும், பரீக்ஷை செய்து பார்ப்பதினாலும் பொது அறிவு விருத்தியாகிறது. வஸ்துக்கள் மூலமாகவே பாஷையும் அறிவும் ஏற்படுகிறது. இயற்கை சாஸ்திரதில் பலவித பாகங்கள் காணப்படுகின்றன. தாவரம், ஜீவவர்க்கம், (மனிதனின் தேக அமைப்பு, பிராணிகள், பறவைகள், ஊர்வன, நீந்துவன) வானத்தின் சிறப்பு பூமியின் அழகு இவை முக்கியமாகும். எல்லாக் குழந்தைகளும், எல்லா ஊரிலும் எல்லா உபாத்தியாயர்களும் கற்கக்கூடிய முதல் விஷயம் இயற்கைத் தோற்றத்தில் காணப்படும் மாறுதல்கள்.

—தொடுத்த

உருவத்தால் நீண்ட உயர் மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றி பழா.

மாத கால சக்கரம்

அடியிற் கண்டவைகளின் கீழ் தினந்தோறும் காணப்படும் மாறுதல்களையும் விசேஷங்களையும் பற்றிக் குறிப்பு வைப்பது மிக அவசியம்

(1) சீதோஷ்ண ஸ்திதி
(2) காய்கறிகள்
(3) மரம், புஷ்பம், பழம்.
(4) உற்சவம், பண்டிகை முதலியன
(5) நஞ்சை அல்லது புஞ்சைப்பயிர்.

இவ் விஷயங்களை அடியிற் கண்ட பிரகாரம் ஒரு பெரிய காகிதத்தில் படம் எழுதி வைத்துக்கொண்டு அந்தந்த இடத்தில் தக்க பிரகாரம் குறிப்புகளை எழுதிவர வேண்டும்.

எண்கள் 1 முதல் 30; ஒவ்வொரு தேதியிலும் காணப்படும் உஷ்ணம், குளிர், காற்று, மழை, பனி, மேக சஞ்சாரம் இவைகளைக் குறித்த விவரம் இந்த வட்டங்களில் அமைக்கப்பட வேண்டும்; இதை ஒவ்வொன்றையும் காட்ட சில நிறம் அல்லது அடையாளம் உபயோகிப்பது பொருத்தமானது.

சூரிய உஷ்ணம்	— மஞ்சள்	மேகசஞ்சாரம்	—இலேசான நீலம்
மழை	— நீலம்	பனி	—வெண்மை
காற்று	— —▷ —▷	வானவில்	—வானவில் (படம்)

தேதி வட்டத்திற்கு மேலே கொஞ்சம் இடமும் கீழே கொஞ்சம் இடமும் பிரத்தியேகமாக இருப்பதைக் காணலாம். மேல் இடத்தில்



ஒரு தினத்தின் அதிக உஷ்ணத்தையும், தாழ்ந்த உஷ்ணத்தையும் குறித்துக் கொள்ளலாம். கீழ் இடத்தில் சூரிய உதயம், சூரிய அஸ்தமான நேரங்களைக் குறிப்பது பொருந்தும். மற்றும் சந்திர உதயம், சந்திர அஸ்தமானம் இந் நேரங்களையும் அதற்கு ஒரு இடம் அமைத்துக்கொண்டு எழுதுவது பொருந்தும். இம் மூன்று குறிப்புகளுக்கும் தினச்சரிப் பத்திரிகை, பஞ்சாங்கம் இவை பிரயோஜனப்படும். இம் மூன்று குறிப்புகளும் 6, 7, 8, வகுப்புகளுக்கே ஏற்றவை.

வட்டத்தின் நான்கு பாகங்கள்.

வட்டத்தில் காட்டியபடி ஒவ்வொரு தலைப்பின் கீழும் காணப்படும் மாறுதல்களை எழுதி வரவேண்டும்.

1937ஞு ஜூன்மீ

வெயில், மழை, பனி	காய் கறி	மரம், பழம், பூ.	பண்டிகைகள்
12 சனி மழை + 13 ஞா. இலேசான மழை 17 வெள்ளி வானவில் சாயங்காலம் 5½	1. முருங்கைக்காய் 2. கத்தரி 3. வெண்டை 4. பாகல் 5. முள்ளங்கி	1. அங்குமூஞ்சி—பூ 2. பனை—காய் 3. ஆலம்—பழம் 4. மா—காய் பழம் 5. ஈச்சு—பழம் 6. பாஞ்சாலம்—பூ 7. மல்லிகை பூ	8 ● 23 ○

இவைகளையே பட மூலமாக விளக்கிக் காட்டுவதும் மிகப் பொருத்தமாயிருக்கும்.

கால சக்கரமும் பண்டிகைகளும்,

சித்திரை மாதப் பிறப்பன்று தமிழர்களுக்கு புது வருஷப் பிறப்பு அன்று புது மாங்காய், புது வேப்பம் பூ முதலியவைகளை உபயோகிக்கின்றோம். அன்று அவைகளைக் கட்டாயமாக உபயோகிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆவணி மாதம் பிள்ளையார் சதுர்த்தி. பிள்ளையாருக்கு நாகப்பழம் பிடிக்கும் என்று பிள்ளைகள் நாகப்பழம் வாங்குகிறார்கள். அதே மாதம் ஸ்ரீ கிருஷ்ணஷ்டமியும் நேரும். ஸ்ரீ கிருஷ்ணனுக்குக்கூட நாகப்பழம், விளாம்பழம், கொய்யாப் பழம் பிடிக்கும். கட்டாயம் வாங்கி வந்து நிவேதனம் பண்ணவேண்டும் என்கிறார்கள். தை மாதம் முதல் தேதி சங்கராந்தி அன்று சூரியனைப் பூஜை செய்கிறோம். கரும்பு வாங்கி வந்து படைக்கிறோம். ஸ்ரீ கிருஷ்ணன் நாகப்பழம் வேண்டுமென்று சொன்னாரா? சூரிய பகவான் கரும்பு தான் வேண்டும் கேட்டாரா? இல்லை இல்லை. அக்காலத்தில் அவைகளே நமக்குக் கிடைக்கின்றன. அவைகளையே நாம் கடவுளுக்குச் சமர்ப்பித்துப் பிறகு நாம் உட்கொள்ளுகிறோம். ஆகவே பண்டிகைகளின் அனுஷ்டானங்களைக் கொண்டும் அந்தந்தக் காலத்தில் என்னென்ன கிடைக்கும் என்று ஊகிக்கலாம்.

வருஷ கால சக்கரம்

இம்மாதிரி 12 மாஸங்களுக்கும் எழுதும் குறிப்புகளைச் சுருக்கமாக அடியிற் கண்டமாதிரி வரைந்துள்ள படத்தில் எழுதிக்கொள்ளலாம்.

இப்பட சம்பந்தமான குறிப்புகள் :

1.	பருவம்	ஊதா	நிறம்
2.	சீதோஷ்ணம்	நீலம்	,,
3.	பண்டிகைகள்	கிச்சிலி	,,
4.	காய்கறிவகை	பச்சை	,,

5.	மரம், பழம்	பழுப்பு நிறம்	நிறம்
6.	புஷ்பம்	ரோஜாநிறம்	,,
7.	விவசாயம்	மஞ்சள்	,,
8.	மிருகங்கள்	வெள்ளை	,,

மாதா மாதம் சேர்த்துவரும் குறிப்புகளின் சாராம்சத்தை மேலே கண்ட வருஷ கால சக்கரத்தில் எழுதி வரவும்.



இம்மாதிரியே 5, 6 வருஷங்கள் செய்து வந்தால் பொதுவாக எப்பொழுது மழை, எப்பொழுது பனி, எப்பொழுது வெயில், எப்பொழுது பலாப்பழம், முந்திரிப்பழம் கிடைக்கும், எப்பொழுது கத்திரி வெண்டை நிரம்பக் காய்க்கும், எப்பொழுது சாமந்திப் பூ கிடைக்கும் என்று சொல்லி விடலாம். இவற்றையே பட ரூபமாக ஒரு தனிக் காகிதத்தில் வரைந்து வைத்துக்கொண்டு பள்ளிக்கூட அறையில் தொங்கவிட்டிருப்பது மிகப் பொருத்தமானது.

தாவரங்களின் வளர்ச்சி

பாலிகை தெளித்தல் எல்லா ஹிந்து குடும்பங்களிலும் கலியாண காலத்தில் பாலிகை தெளிப்பது என்பது வழக்கம். படத்தில் காட்டியவை

போன்ற மட்பாத்திரங்களின் நடுவில் தேங்காய் நார் சொருகி மேல் மண் போட்டு நவதானியங்களைப் பால் கலந்த ஜலத்தில் சற்று ஊறவைத்துப்

பிறகு தெளிப்பது வழக்கம். நான்கு நாள் கழித்ததும் அவ்விதைகள் நன்றாய் வளர்ந்திருக்கும். இதேமாதிரி விதைகளை ஒவ்வொரு இனமாக வேறு வேறு பாலிகைகளில் போட்டு வெயில் உள்ள இடங்களில் வைத்து விதை முளைத்து வருவதைக் காட்டமுடியும். உதாரணம் கோதுமை கேழ்வரகு பாலிகையில் 20-7-37 ல் விரைத்தது 23-7-37ல் முளை கிளம்பியிருந்தது.

தொட்டிகளில் செய்து காட்டக்கூடிய பரீக்ஷைகள்

தாவர வளர்ச்சியை நன்கு கவனிக்கவும், இயற்கையின் அழகை கண்ணால் பார்த்து அனுபவிக்கவும் ஓர் தோட்டம் இன்றியமையாததே. ஆயினும் சில சந்தர்ப்பங்களில் தோட்டமில்லாத குறைவினாலே இப்பாடம்

விட்டுவிடக் கூடியதல்ல. அக்குறையை நிவர்த்திக்க சில பூந்தொட்டிகள் வைத்துக்கொள்ளலாம். யானே இப்பூந்தோட்டிகளில் செடி வளர்த்துப்

பார்த்தும், குழந்தைகளுக்கு அவற்றைக் காட்டியும் சந்தோஷித்திருக்கிறேன். ஆனால் பரீக்ஷார்த்தமாக மாத்திரம் இவற்றை எடுத்துக்கொள்ளுவோம்.

1. வாய் அகன்ட தொட்டியில் கம்பு, கேழ்வரகு, கோதுமை, நிலக்கடலை, இவை விதைத்து வளர்ச்சியைக் கவனித்தல்.

2. சற்றே ஆழமான தொட்டிகளில் வெங்காயம், உருளைக் கிழங்கு, சேப்பங் கிழங்கு இவற்றை வளர்த்தல்.

3. வாயகன்ட தொட்டியில் மிளகாய், வெண்டை, கொத்தவரை, அவரை வளர்த்தல்.

அவரைக் கொடிக்கு வெளிச்சம் படும்படிக்கும் கொடி பந்தலில் ஏறும்படியான வசதியுள்ளவிடத்தில் இத்தொட்டியை அமைக்கவும்.

4. சில குரோடன் கிளைகளைப் பதிபோட்டு அவற்றின் வளர்ச்சியை அறிதல்.

புட்டிகளில் செடிகள் வைத்துக் காட்டக்கூடிய பரீக்ஷைகள்

1. ஒரு குரோடன் கிளையை ஒரு புட்டியில் வைத்து ஜலம் விட்டு வைக்கவும். அதே கிளை அப்புட்டியில் வேர்விட்டு வளருவதைக் கவனிக்கலாம். ஜலம் அடிக்கடி மாற்றப்படவேண்டும்.

2. சற்றே சிவந்த ஜலத்தில் ஒரு குரோடன் கிளையை சில நாள் விட்டு வைக்க குரோடன் இலையின் நரம்புகள் சிவந்து இருப்பதைக் கவனிக்கலாம்.

ஜீவவர்க்க சம்பந்தமான சில பரீக்ஷைகள்

1. ஒரு வாயகன்ட பாத்திரத்தில் மீன்கள் வைத்து அவைகளுக்கு ஆகாரம் போட்டு அவைகளின் நடமாட்டத்தைக் கவனித்தல்.

2. கொசுப் புழுக்களை ஒரு புட்டியில் வளரச் செய்து கொசு உண்டாகும் விதத்தை அறிதல். 6-8-37ல் கொணர்ந்த புழுக்களில் ஒன்று 10-8-37ல் வேறு உருவம் அமைந்து ஒன்று மாத்திரம் 11-8-37ல் கொசுவாக வெளி வந்திருந்தது.

3. புல்லில் மேயும் பச்சைப் புழுவை ஒரு கண்ணாடிப் பெட்டியில் வளர்க்க அதன் மாறுதல்களை நன்கு அறிய முடியும்.

4. ஒரு கண்ணாடிப் புட்டியில் சில தவளை முட்டைகளை வைத்து அவற்றின் வளர்ச்சியையும் நன்கு அறிய முடியும். இப் பெட்டியை அட்டை, வலைத்துணி அல்லது வலை அட்டை, கண்ணாடி இவற்றாலும் செய்து கொள்ளலாம்.

சில மாதிரிப் பாடங்கள்

I. விதைகள்

குறிப்பு :—(1) முந்தின தினமே மொச்சை, கடலை, பயறு, துவரை, பட்டாணி, போன்ற விதைகளை ஊற வைக்கவும்.

(2) பாலிகையில் கம்பு, கேழ்வரகு, நெல், துவரை இவை விதைக்கவும்.

A. ஒவ்வொரு தினுசிலும் சில விதைகளை ஜலத்தில் போட்டுப் பார்க்கவும். சிலவை மிதக்கின்றன. சிலவை ஜலத்தின் அடியில் தங்குகின்றன. மேலே மிதப்பவை சொத்தை, பதர், பூச்சி அரித்தவை முதலியன. நல்ல விதை கெட்டியாகவும் இருக்கும்.

ஊற வைத்த விதை.

1. ஆளுக்குக் கொஞ்சம் கொடுக்கவும். கொஞ்சம் கையினால் அழுத்திப் பார். தோல் நீங்கிவிடுகிறது. ஒரு கொக்கி மாதிரி ஒன்று தெரிகிறது. அதாவது முளை தெரிகிறது.

2. இரட்டைப் பருப்புக்கள் தெரிகின்றன. அவை ஒரு முளையினால் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

3. மெதுவாக அப் பருப்புக்களைப் பிரிக்கவும். ஒரு பருப்பின் மீது வெண்ணிறமான இரண்டு இலைகள் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. தோல் விதையைக் காக்கிறது. விதைக்குள் செடியின் குழந்தை இருக்கிறது. விதையை நட செடி முளைத்து வருகிறது.

20-7-37 பாலிகையில் விதைத்த கம்பு கேழ்வரகு இவை 23-7-37 முளை விடுகின்றன.

1. விதைகளை ஊறவைத்து வேகவைத்து சுண்டல் செய்து சாப்பிடுகிறோம். (கடலை, காராமணி, மொச்சை, பட்டாணி).

2. விதைகளை ஊறவைத்து வேகவைக்காமலும் கோசுமரி செய்து சாப்பிடுகிறோம் (பயத்தம் பருப்பு)

3. சிலவற்றை வறுத்துச் சாப்பிடுகிறோம் (கடலை, நிலக் கடலை பட்டாணி)

4. சில விதைகளை மா அறைத்துப் பணியாரங்கள் செய்கிறோம் (அரிசி, கடலை, பயறு).

5. மேல் தோல் மாட்டிற்கு ஆகாரமாகிறது. தோல் நீங்கின் விதை முளைக்காது.

பண்டு முளைப்பது அரிசியேயானாலும்
விண்டுமி போனால் முளையாதாம்.

பாடம் 2. விதைகள் பரவும் விதம்

இடம்: தோட்டம். புல்தரை அருகாமையில் ஒட்டடைப் புல். மரத்தடி. புஷ்பச் செடிகள்.

உபகரணம் : 1. கரும்பலகை, சாக்கட்டி.

2. ஜலம் பாதி அளவு உள்ள கண்ணாடிப் பாத்திரம் அல்லது கற்சட்டி, பீங்கான் பாத்திரம்.

3. படங்கள். a. ஆற்று ஓரத்து ஈச்சங்காடு
b. அரசமரத்து மீது ஒரு வேப்பஞ் செடி.
c. கிணற்றினுள் ஒரு ஆலஞ் செடி.
d. மண்சுவரின் மீது ஒரு வேப்பஞ் செடி.



4. விதைகள். டபாஸ் காய், எருக்கங்காய், ஒட்டடைப் புல், தேள் கொடுக்கிக்காய், நெரிஞ்சி முள், ஏரோப்ளேன் காய்.

5. ஒரு துண்டு.

சம்பாஷணை.

நாம் எங்கே உட்கார்ந்திருக்கிறோம் ?
இங்கே என்னென்ன செடிகள் இருக்கின்றன ?
இவைகளை யார் பயிராக்கினது ?
ஆகாரத்திற்காக என்ன செடிகள் ?
பழத்திற்காக என்ன செடிகள் ?
புஷ்பத்திற்காக என்ன செடிகள் ?
இதோ ஒரு பருத்திச்செடி, இது எதற்கு ?

ஆகவே மனிதன் தன் ஆகாரம், தனது உடை மற்றும் தனது பூஜை, இதர அழகு சௌகரியத்திற்காக சில செடிகளை வேண்டுமென்றே உற்பத்தி செய்கிறான். இவனே விதைகளைத் தேடிவந்து விதைத்து வேண்டிய ஜாக்கிரதைகளை எடுத்துக்கொள்கிறான். கொடிக்காலில் வெற்றிலையும், சில தோட்டங்களில் மருந்துச் செடிகளையும் பயிராக்குகிறான்.

i. இது என்ன? (நெரிஞ்சி முள்). இது காலில் தைக்கிறது. மனிதன் இதைத் தூர எறிந்து விடுகிறான். அது எங்கேயோ தரையில்விழுந்து கிடக்கிறது. மறுபடியும்முளைத்து விடுகிறது. இவனே வேண்டுமென்று ஜலம் ஊற்றி வளர்த்தானா? ஜலம் ஊற்றினது யார்? (மழை)

ii. நாம் சற்று புல் தரையில் உட்காருவோம். இப்பொழுது எழுந்திருங்கள். உங்கள் துணியைப் பாருங்கள். என்னமோ ஒட்டிக் கொண்டிருக்கிறதே. அடடா துணியை உதறிக்கொள்ள வேண்டும். ஒட்டிக் கொண்டவைகள் எவை (புல் விதைகள்) உதறும்பொழுது அவை நாலாபக்கமும் விழுந்து விடுகின்றன.

iii. நீங்கள் நாகப்பழம், மாம்பழம், பேரீச்சம்பழம் தின்றுவிட்டு கொட்டைகளை உமிழ்ந்து விடுகிறீர்கள். அக்கொட்டைகள் மறுபடியும் தாமே முளைத்துப் பார்த்து இருக்கிறீர்களா? வேண்டுமென்று அவைகளை வளர்த்தீர்களா?

அம்மாதிரி எவ்விதக் கொட்டைகளை அல்லது விதைகளை தூர எறிந்து விடுகிறோம்.

புளியங்கொட்டை இலவங்கொட்டை காய்கறி விதைகளைக் கூட எறிந்துவிடுகிறோம் (உ-ம்.) பூசனி, பாகல், தக்காளி.	இவைகளை மழை ஜலம் எங்கேயாவது அடித்துக் கொண்டு போய் ஒதுக்கி விடுகிறது.

iv. நாம் சற்று வெளியே போகலாம் வாருங்கள். (ஒட்டடைப் புல் இருக்கும் வழியாகச் செல்லுகிறார். மறுபடி திரும்பி வருகிறார்). என்ன உங்களது ஆடையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றது கவனியுங்கள். இதோ ஒரு ஒட்டடைப் புல் இதை மேல் தடவுகிறேன். என்ன ஆகிறது (ஒட்டிக் கொள்கிறது). ஒட்டிக் கொண்டால் நாம் என்ன செய்கிறோம்? (எடுத்து எறிந்து விடுகிறோம்). அவை மறுபடியும் அங்கேயே முளைக்கும். கிராமத்திலிருந்து கிராமம் கால் நடையாகப் போகும்பொழுதும், செடிகள் அடர்ந்த ஒற்றடிப் பாதை வழியாய்ச் செல்லும் பொழுதும் இவை ஒட்டிக் கொள்ளும்.

(குறிப்பு):—உலாவிவருதல் மூலமாக சிலவிஷயங்களைக் குழந்தைகளுக்கு அறிமுகமாக்கவேண்டும். அவற்றைப் பாடசமயத்தில் ஞாபகமூட்டவேண்டும்.

B. பக்ஷி

நாம் உலாவிவரும்பொழுது ஒரு மரத்தின்மீது மற்றொரு செடியைக் கவனித்தோம். அங்கு எப்படி வளர்ந்தது?

சுவரின்மீது என்ன செடி வளர்ந்திருந்தது?
கிணற்றுக்குள் என்ன செடி வளர்ந்திருந்தது?
ஆல், அரசு, வேம்பு இவை காணப்பட்டன.
இந்தப் பழத்தை விரும்பிப் புசிக்கும் பக்ஷி எது?

பழங்களைத் தின்றுவிட்டு ஆங்காங்கு எச்சமிடுகிறது. [நாம் புத்தியுள்ளவர்கள். கக்கூஸ்போன்ற பிரத்தியோகமான விடத்தில்தான் மலஜலம் கழிக்கவேண்டும்].

மரத்தின் மீது மண் எது? (காற்று மண்ணை அடித்துக்கொண்டுத் தள்ளிவிடுகிறது.

ஜலம் எது? (மழை)

C. கால் நடை

மாட்டின் குளம்பில் என்ன விசேஷம்? (பிளவு) இதோ இந்த விதையைப்பாருங்கள்? இது குளம்பில் அகப்பட்டால் மாட்டிக்கொள்ளும். மறுபடியும் மாடு வேறுஎங்கேயாவது நடந்து போகும்பொழுது கீழே விழுந்துவிடும். அப்பொழுது அது கீழேவிழுந்து முளைக்கும், காயின் அமைப்பு என்ன விநோதமாயிருக்கிறது பாருங்கள்.

D. காற்று

இது என்ன செடி? (எருக்கஞ் செடி)

இது என்ன காய்?

இந்தக்காய் காய்ந்து வெடித்தால் விதைகள்——(பறந்து செல்லும்).

குழந்தைகள் இதைப் பறக்கவிட்டு வேடிக்கைப் பார்ப்பார்கள். (தாத்தா பறக்கிறது என்று சொல்லுவார்கள்.)

இதன் விதைஎல்லாம் நாலுபக்கமும் சிதறிவிடுகிறது.
யார் இதைநாலுபக்கமும் சிதறச் செய்தது?

ii. இதைப்பறக்கவிடு. இது எதைப்போல் பறக்கிறது. (அதன் பெயர் ஏரோப்ளேன்காய்)

E. ஜலம்

ஆற்று ஓரத்தில் ஈச்சஞ்செடி ஏராளமாய் முளைத்திருக்கிறது. எது அவ்வளவு செடிகள்? யார் விதை விதைத்தார்கள்? ஆற்றில் வெள்ளம் வருவதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அப்பொழுது கீழேகிடக்கும் விதைகள் வெள்ளத்தினால் வேறுஇடங்களுக்கு அடித்துக் கொண்டு போகப்படும்.

ii. இதோ ஒரு காய்ந்தகாய். இதை ஜலத்தில் போடுகிறேன். நீங்கள் என் சமீபம் வாருங்கள். ஆளுக்கு ஒன்று எடுத்துப் போடுங்கள். என்ன சத்தம் கேட்கிறது? எது வெடிக்கிறது. எதன்மீது பட்டதும் வெடிக்கிறது? இது சுலபமான காசு இல்லாத நெருப்பு இல்லாத டபாஸ். [டப் என்று வெடித்தால் டபாஸ், "பட்" என்று வெடித்தால் படாஸ் என்று சிலர் சொல்லுகிறார்கள். இது சரிதானா?]

iii. நெற்றுத் தேங்காய் மிதந்து செல்லுகிறதைப் பார்த்திருக்கிறீர்களா? ஆற்றங்கரையில் உள்ள தென்னைமரத்திலுள்ள நெற்று சில சமயம் ஜலத்தில் விழுந்து எங்கேயாவது ஒதுங்கிப்போகும். அதை யாராவது காணாவிடில் அது அங்கே முளைத்துவிடும்.

ஈசுவர சிருஷ்டியில் எவ்வளவோ அற்புதங்கள் காணப்படுகின்றன. எத்தனையோ ரகசியங்கள் இருக்கின்றன. இவ்வளவு ஆச்சரியத்திற்கும் காரணமாயிருக்கும் கடவுளை நாம் நினைப்பது அவசியம்.

கரும்பலகைக் குறிப்புகள்.

விதைகள் பரவுதல்

I. **மனிதன்**

(A) **வேண்டுமென்று செய்வது.**

நெற்பயிர், பழஞ்செடிகள், காய்கறித்தோட்டம், புஷ்பத் தோட்டம், கொடிக்கால் பயிர், மருந்துச் செடிகள், எண்ணெய் வித்துக்கள் கொடுக்கும் செடி, மரங்கள், புஞ்சைத்தானியங்கள்.

(B) **தெரியாமல் செய்வது.**

சாப்பிட்டுவிட்டு துப்பிவிடுதல். (மாங்கொட்டை,)
வேண்டாமென்று எறிந்து விடுவது (புளியங்கொட்டை)
துணியை உதறுவது (புல்விதை.................)
காலை உதறுவது (நெரிஞ்சிமுள்) ....
உடம்புல் ஒட்டிக் கொண்டதை எறிந்துவிடுவது........

II பக்ஷி 1. சுவரில் வேப்பஞ்செடி
2. கிணற்றில் ஆலஞ்செடி, அரசஞ்செடி,
3. மரத்தின் மீது மரம்

III கால் நடை. தேள் கொடுக்குக்காய்

IV காற்று. எருக்கம் விதை
பஞ்சு.
ஏரோப்ளேன் காய்.

ஜலம் : ஆற்று ஓரத்தில் ஈச்சமரம், தென்னை மரம், டபாஸ் காய்.

விடுகவிகள்

அடியிலுள்ள விடுகவிகளைச் சொல்ல அவை என்னவென்று பிள்ளைகள் கண்டுபிடிக்கட்டும்.

1. நாமெல்லாரும் வேண்டாக்கனி
காக்கை மெத்த விரும்பும் கனி
அக்கனி எக்கனி?

2. இரண்டு இறக்கையுண்டு, ஒருவாலுண்டு பக்ஷியல்ல,
காற்றில் கிளம்பி கடிந்து செல்லும் விமானம் அல்ல,
மரத்தில் காய்த்துப் பறந்து செல்லும், ஒன்று பத்தாகும் நூறும் ஆகும், எது என்ன?

3. காசு இல்லாத டபாஸ்
நெருப்பு இல்லாத டபாஸ்
தண்ணீரைக் கண்டு தவிக்கும் டபாஸ்
ஒன்று வெடிக்க பத்து வரும் டபாஸ், அது என்ன டபாஸ்?

4. மரியாதைக்கு வைத்த தட்டிலே மூன்று கண்டேன்
ஒன்று மிதக்கும்
ஒன்று கரையும்
ஒன்று அடியில் போகும்
மூன்றும் சேர்த்து மெல்ல இரத்தம் தோன்றும், அவை எவை?

செடிகளின் வளர்ச்சியைப் பற்றின குறிப்புகள்

ஒரு தொட்டியில் வைத்த ரோஜாப் பதியனின் வளர்ச்சியைக் கவனிக்கையில் அடியிற் கண்ட குறிப்பு வைக்கப்பட்டது.

பதி வைத்த தினம்	செடியின் உயரம் அடி	அங்.
15—12—35	1—	3
பின்பு கணக்கு எடுத்த நாட்கள் :		
5—1—36	2—	8
15—1—36	3—	4
25—1—36	4—	5
5—2—36	5—	6
10—2—36	6—	2
20—2—36	6—	10

மற்றும்	விதை போட்டது ஜலம் பாய்ச்சினது களை பிடுங்கினது முதல் இலை கிளம்பினது. கிளை விட்டது கொடி கிளம்பினது மொட்டு புஷ்பம் காய் பழம்	இவை தோன்றின நாட்களில் அன்றாடம் அச்செடியைப் பற்றின குறிப்புகளையும் செடியின் உயரம், இலையின் வடிவம் புஷ்பத்தின் வடிவம், நிறம், பழத்தின் தோற்றம், நிறம் இவைகளைப் பற்றின குறிப்பு சித்திரம் இவைகளைத் தயாரித்தல் மிக ஏற்றதாகும்.

இயற்கைப் பாடத்திற்கு தனிப்புத்தகம் வேண்டுமா?

உபாத்தியாயரே சொல்லிக்கொடுக்க வேண்டிய விஷயங்களையும் முறைகளையும் அறிதல் வேண்டும். பாஷை சம்பந்தமான புஸ்தகங்களில் இயற்கை சம்பந்தமான பாடங்கள் அதிகம் காணப்படுகின்றன. அதனால் மாத்திரம் இயற்கை யறிவு நன்றாய் ஏற்பட்டுவிடாது. விஷயத்தைச் சொல்லிக் கொடுப்பதற்கு உலாவி வருதல், பரீக்ஷைகள், சோதனைகள் தோட்டத்தில் செடிகளை வளரவிடுதல், விடுகவிகள், பழமொழிகள், படங்கள் இவை ஏற்ற சாதனம் ஆகும். பாஷைப்பாடத்தில் இப் பாடங்கள் வருவதனால் பாஷையும் அதிகம் வளர இடமிருக்கிறதைக் காணோம். இவைகளுக்கென்றே பிரத்தியேகமான புஸ்தகங்கள் இருப்பின் அவை உபாத்தியாயருக்கு மாத்திரம் ஏற்றது ஆகும். அல்லது புத்தக சாலைக்குப் பொருந்தியது ஆகும். தானே புஸ்தகத்தை எடுத்துப் படித்து விஷயங்களை அறியச் சக்தியுள்ள பிள்ளைகள் புஸ்தகாலயத்தை அணுகித் தேவையான புஸ்தகத்தைக் கொண்டு அறிவைப் பெருக்கிக்கொள்ளலாம். புஸ்தகபாரத்தைப் பெருக்குவதினால் மாத்திரம் பாஷையோ அறிவோ ஓங்கிவிடாது. இக்காரணங்களைக் கொண்டு இயற்கை பாடத்திற்குப் பிரத்யேகமான புஸ்தகம் பிள்ளைகளுக்கு வேண்டுவது அவசியமன்று. இப் பாடத்திற்கு உரித்த நேரத்தில் பெரும்பாலான நேரம் தோட்ட வேலை உலாவி வருதல், சம்பாஷணை, இயற்கை காட்சிகளைக் காணுதல், குறிப்பு வைத்தல், காட்சிக்கேற்ற பொருள்களைச் சேமித்தல், காட்சி சாலை யமைத்தல் இவற்றிலேயே செலவிடப்படவேண்டும்.

(மற்றும் தொடரும்.)

பத்திராதிபர் குறிப்பு:

அடுத்த இதழிலிருந்து, ரக்ஷணைப் படங்களும், ஆச்சர்ய குறிப்புகளும், முன்போல் சேர்க்கப்படும். இவ்விதழில் இல்லாததிற்கு சந்தாதார்கள் மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

14764 சென்னை-600 008.

பாலர் பாட புத்தகங்கள் சம்மந்தமான ஓர் ஆராய்ச்சி

(பி. சுப்பிரமணிய அய்யர், தியாகராஜ நகர்)

(87-ம் பக்கம் தொடர்ச்சி)

முதல் போதனா முறை விதி

ஒரு பாஷையை எழுதவும் படிக்கவும் சிறு குழந்தைகட்குக் கற்பிக்கப் புகுமுன், (1) அவர்களை யுற்சாகப்படுத்தவேண்டும் (2) அவர்கள் பார்க்கவுங் கேட்கவும் விரும்புவனவற்றை அவர்களுக்குதவவேண்டும் என்பனபோன்ற நோக்கங்களையே எல்லா புத்தகாசிரியர்களும் கருத்திற் கொண்டிருக்கிறார்கள். பாடங்களின் ஆரம்பத்தில் படங்கள் சில வரைந்திருத்தலும், அம்மா, அப்பா, படம், பழம், பட்டம், பம்பரம் முதலான மொழிகளையே உபயோகித்திருத்தலும் குழந்தைகளை யுற்சாகப்படுத்தும் பொருட்டேயாம். "படங்களைக் கண்டு சந்தோஷிப்பதனால் குழந்தைகளுக்கு எழுத்துக்களைக் கற்பதிலுள்ள கஷ்டம் நிவர்த்திக்கப்படுகிறதா? இம்முறையானது, கைப்பு மிக்க 'க்வினைன்' மாத்திரையைச் சர்க்கரைக் குழம்பில் தோய்த்துக்கொடுப்பதையே ஒக்கும். சர்க்கரை கரையும் மட்டும் அதை நகர்ந்து பின் மாத்திரையைத் துப்பிவிடும் குழந்தைகள் இலரோ. செவ்வனே கற்றுத் தேர்வதற்கு எடுத்துக்கொண்ட எழுத்தையேனும் மொழியையேனும் பல முறை எழுதியும் படித்தும் பயிலவேண்டி இருப்பதால் அதைக் குழந்தைகள் சிறிது வெறுக்காமல் இருப்பதில்லை. அப்படி வெறுக்குங்கால் ஓர் அளவில் உபாத்தியாயர் குழந்தைகளைக் கட்டாயப்படுத்த வேண்டியதாகவே நேர்கிறது. ஆகவே இப்புது முறையினாலே படம் பார்க்கும் சந்தோஷத்தினால் கஷ்டந்தோற்றாதவாறு குழந்தைகள் மயங்கிவிடுகிறார்களென்று நினைப்பது நமது புத்தி மயக்கத்தையே உணர்த்தும்" என்பர் பண்டை முறையபிமானிகள்.

இரண்டாம் விதி

எளிய எழுத்துக்களை முதலில் போதிக்கத் தொடங்கி பிறகு படிப்படியாக கடினமான எழுத்துக்களைப் போதித்துவரவேண்டும் என்பதாகிய போதனா முறை விதியையே எல்லா ஆசிரியர்களு மனுசரித்திருக்கிறார்கள்.

இவ்விதிக்கு இணங்க பாலர் பாட புத்தகங்கள் பெரும்பாலனவற்றை இரண்டு பாகங்களாகப் பிரிக்கக்கூடும். சில புத்தகங்களில் 'அ'

JL
T15m21, N36PA N37.2.45

என்ற உயிர் ஏறிய மெய் எழுத்துக்களும் ‘அ’ முதல் ‘ஔ’ வரையிலுள்ள உயிர் எழுத்துக்களும் முதற்பாகத்தில் போதிக்கப்படுகின்றன. இரண்டாம் பாகத்தில் ஏனைய உயிர் ஏறிய மெய் எழுத்துக்கள்போதிக்கப்படுகின்றன.

இன்னும் சில புத்தகங்களில் ‘அ’ ஏறிய மெய் எழுத்துக்கள் மட்டும் முதற்பாகத்தில் போதிக்கப்படுகின்றன. இரண்டாம் பாகத்தில் ‘அ’ முதல் ‘ஔ’ வரையில் உள்ள உயிரெழுத்துக்களும் ஏனைய உயிர் மெய் எழுத்துக்களும் கற்பிக்கப்படுகின்றன.

இதுவும் தவிர ஒவ்வொரு பாடத்தையும் (1) எழுத்துக்களைப் போதிக்கும் பகுதி என்றும் (2) போதிக்கப்பட்ட எழுத்துக்களில் பயிற்சி தரும் பகுதி என்றும் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம்.

அநேகமாக எல்லா புத்தகங்களிலும் முதற்பாகமே விரிவாகவும் மிகுந்த கவனத்தோடும் எழுதப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு எழுத்தும் கற்பிக்குந்தோறும் ஒரு படம் காட்டப்படுகிறது. இதற்கு மாறாக இரண்டாம் பாகத்தில் பயிற்சிக்குரிய பகுதி இலதாதல் கவனிக்கத்தக்கது.

இப்பாகத்தில் குறைந்த பாடங்களில் மிகுதியான எழுத்துக்கள் சுருக்கமாக போதிக்கப்படுகின்றன. ‘தா’ முதல் ‘தௌ’ வரையிலுள்ள எழுத்துக்களைப் போதிக்கப் புகும் பாடத்தை மாதிரிக்கு இங்கு எடுத்துக்கொள்வோம். அவ்வெழுத்துக்களுள் சிலவற்றிற்கே ஏற்றமொழிகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அம்மொழிகளுள்ளும் ஒன்றிரண்டே படங்களால் விளக்கப்பட்டிருக்கின்றன. இதோடு பாடம் முடிவடைந்திருத்தலால் ‘இது மாதிரியே மற்ற எழுத்துக்களையும் தகுந்த மொழிகள் கொண்டும் படங்கள் கொண்டும் விளக்கிக்கொள்ள வேண்டும்’ என்று சொல்லுவதுபோல் தோன்றுகிறது. இரண்டாம் பாகத்தில் போதிக்கப்படும் உயிர் மெய் எழுத்துகளே கற்பதற்கும் கற்றபின் நினைவிலிருத்துதற்கும் மிகக் கஷ்டமானவை. இவைகளை சுருக்கமாகவும் துரிதமாகவும் முடித்தல் உசிதமன்று. முதலில் சில பாடங்களை வசீகரமாகவும் சுலபமாகவும் செய்திருப்பதினாலேயே கற்கக் கடினமான பிற்பகுதி எளியதாகிவிட்டதாகக் கருதுதல் முற்றும் தப்பிதமாம்.

இப்புத்தகங்கள் யாருக்காக எழுதப்பட்டவை

இப்புத்தகங்கள் உபாத்தியாயர்களுக்காக ஏற்பட்டனவா அல்லது பாடம் கற்போர்க்கென எழுதப்பட்டனவா என்று யோசித்தால் ஒரு முடிவுக்கும் வரமுடியாது. சில அம்சங்களைக் கவனித்தால் உபாத்தியாயர்களுக்காக ஏற்பட்டனவென்றும் வேறு சில அம்சங்களை நோக்குங்கால் குழந்தைகளுக்காக எழுதப்பட்டன வென்றும் தோன்றும், மேநாடுகளில் எழுதப்படும் புத்தகங்களில் உபாத்தியாயருக்குரியன (Teacher's book) என்றும் மாணவர்க்குரியன (Pupil's book) என்றும் இரண்டு

வகைகள் இருப்பதைக் காணலாம். உபாத்தியாயர்களுக்கென்று புத்தகங்கள் வெளியிட்டால் வாங்குவோரில்லை என்று அப்புத்தகங்களிலே மாணவர்க்கு வேண்டிய விஷயங்களையும் சேர்த்து அவர்களை வாங்கும்படி செய்வது நம் நாட்டுப் பழக்கமாக இருந்துவருகிறது. இப்பழக்கத்தைவிட்டொழித்து உபாத்தியாயர்களுக்கும் மாணவர்க்கும் தனித்தனி புத்தகங்கள் வெளியிடும் பழக்கத்தை நம் நாடு ஏற்கும் நாள் எந்நாளோ. இப்படிச் செய்வதனால் (1) குழந்தைகளுக்கு வேண்டாத விஷயங்கள் அவர்கள் கண்களிற் படாமலிருக்கும். (2) அவர்களுக்கு வேண்டாத பாகத்திற்கு அவர்கள் பணச் செலவு செய்யவும் அவசியமிராது.

குழந்தைகளுக்கு வேண்டாத சில விஷயங்கள்

(1) “க்” என்னும் மெய் எழுத்தின் மேல் “ஊ” என்ற உயிர் ஏறினால் உண்டாகும் உயிர் மெய் எழுத்து எழுத வரி வடிவத்தில் “க”க்கு எந்த பாகம் சேர்க்கவேண்டுமோ அதைத் தனியாக எழுதிக்காட்டுதல்.

(2) க் × ஊ = கூ என்று எழுதிக்காட்டுதல் (இதை முதல் வகுப்புக் குழந்தைகள் உணருதல் அசாத்தியம் ஆகும்.)

(3) ஒரு புத்தகத்தில் டங்காவின் படம் காணப்படுகிறது. அதன் கீழே “டங்கா” என்று எழுதப்பட்டிருக்கிறது. இம் மொழியில் “ட” என்ற எழுத்து சிவந்த மையிலும் ஏனைய எழுத்துக்கள் கருமையிலும் அச்சிடப்பட்டிருக்கின்றன. அதே பக்கத்தின் அடியில் “ட” என்ற எழுத்து தனியாக வரைந்துள்ளது. இதனால் “ட” என்ற எழுத்தைப் போதிப்பதே ஆசிரியரின் நோக்கம் என்று விளங்குகிறது. முன்னமே குழந்தை அறியாதனவும் இப்போதும் பயிலப் போகாதனவுமான ‘ங்’ ‘கா’ என்ற எழுத்துக்கள் குழந்தைகளுக்கு ஏன் காட்டப்படவேண்டும். குழந்தை, “ட” என்ற எழுத்தை மட்டும் ஆழ்ந்தும் ஏனைய எழுத்துக்களை மேம்போக்காகவும் கவனிக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது உசிதமாமோ. இவ்விஷயங்களைக் கவனிக்குமிடத்து உபாத்தியாயருக்குரிய இவ்விஷயங்கள் ஏன் குழந்தைகளுடைய பாட புத்தகங்களில் காணப்படவேண்டுமென்று தோன்றுகிறது. இப்புத்தகங்களில் உபயோகப்பட்டிருக்கும் பெரிய அச்சுக்களையும் பல நிறச் சித்திரங்களையுங் காணுங்கால் இவை குழந்தைகளுக்காகவே எழுதப்பட்டனவென்று தோன்றுகிறது.

ஆசிரியர்கள் இந்தப் புத்தகத்திற்குள் எப்படியாவது தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் போதித்தாகவேண்டுமென்று நினைப்பதாகத் தெரிகிறது. இந்த எண்ணத்தினால் சில சங்கடங்கள் ஆசிரியர்களுக்கு ஏற்படுகின்றன. (1) விரிவாக அநேக வார்த்தைகளையும் படங்களையும் உபயோகிக்க முடியாமற் போகிறது. (2) மிக அரிதாக வரக்கூடிய எழுத்துக்களுக்காக தேர்ந்து எடுக்கப்படும் மொழிகள் எளிதில் குழந்தைகளுக்கு அர்த்தமாகாதனவாகவே இருக்கின்றன. ஆகையால் சில எழுத்துக்களை அவை அவசியமாக வரவேண்டிய சமயங்களிலே கற்பித்துக்கொள்ளலாமென்று பொறுமையுடனிருத்தல் தகுதியாகும்.

இப் புத்தகங்களில் போதிய அளவு மொழிகள் இல்லாமையால் குழந்தைகள் படித்துப் பயிலுதற்கு ஏற்றவையாக இருப்பதில்லை. ஆங்கில புத்தகாசிரியர்கள் தாங்கள் புத்தகங்கள் எழுதும்போது சில விதிகளை ஏற்படுத்திக்கொள்ளுகிறார்கள். அவை (1) ஒரு பாடத்திற்கு இத்தனை புது மொழிகள் கற்பிக்கப்படவேண்டும். (2) கற்பிக்கப்பட்ட புது மொழிகள் ஒவ்வொன்றும் இத்தனை முறை, வாக்கியங்களில் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். (3) இத்தனை பாடங்களுக்கொருதடவை பயிற்சிக்காக பாடங்கள் அமைக்கப்படவேண்டும் என்பனவாம். இவைபோன்ற விதிகளை பாலர் பாட புத்தகாசிரியர்களும் கவனிப்பார்களானால் அவர்களது வேலை சிறப்புற்று விளங்கும். (1) ஒரு பாடத்தில் இத்தனைப் புது எழுத்துக்கள் போதிக்கப்பட வேண்டும். (2) போதிக்கப்பட்ட எழுத்துக்களை இத்தனை வார்த்தைகளில் உபயோகித்திருக்க வேண்டும். (3) இத்தனை பாடத்திற்கொருதடவை படித்துப் பயிலுதற்கு பாடங்கள் இருக்கவேண்டும் என்பன போன்ற விதிகளை கவனித்தல் நலம். சிறு குழந்தைகட்குக் கேட்கும் வார்த்தைகளைத் திரும்பவும் சொல்லுதல் மிக எளிது. புது புத்தகம் வாங்கிய இரண்டொரு தினங்களுக்குள்ளே மூன்று நான்கு பாடங்களைக் குழந்தைகள் பாராமல் சொல்லுவதை நாம் கவனித்திருக்கிறோம். இந்த சக்தி இருத்தலாலே புதியதொரு பாடத்தைக் குழந்தைக்கு இரண்டொரு தடவையே சொல்லிக்கொடுத்தோமெனினும் உடனே அக் குழந்தை பாடத்தை சரியாகவே படித்துக்காட்டுகிறது. இதனால் தப்பிதமில்லாமல் எல்லாவற்றையும் குழந்தை உணர்ந்து விட்டதாக நினைப்பதற்கில்லை. ஞாபகசக்தியினால் சொல்லுகிறான் என்று கொள்ளுவதே தகுதியாகும். இக் காரணத்தை உத்தேசித்து தான் படித்துப் பயில பாடங்கள் அநேகம் இருக்கவேண்டுமென்பது. அப்பாடத்தில் கற்றுக்கொண்ட எழுத்துக்கள் பல படித்தாக பயிற்சிப் பாடத்தில் உபயோகப்பட்டிருக்க வேண்டும்.

பாலர் பாட புத்தகங்களெல்லாவற்றிலும் கா, ஙா, சா, ஞா, டா, ணா போன்ற எழுத்து வரிசைகளுக்கேற்றவாறே பாடங்களமைந்திருக்கின்றன. ஒன்றிலாவது க, கா, கி, கீ, கு, கூ போன்ற வரிசைகளுக்குத் தகுந்த பாடங்களெழுதப்படவில்லை. "இக் குறை பாட்டினாலேதான் குழந்தைகள் மேல் வகுப்புகளுக்குச் சென்ற பிறகுங்கூட சொல்வதை எழுதுங்கால் (Dictation) அதிக தவறுகள் செய்கிறார்கள். குறுகிய ஒலியுடைய எழுத்துக்களுக்குப் பதிலாக நெடிய ஒலியுள்ள எழுத்துக்களையும் நெடி ஒலியுள்ள எழுத்துக்கள் எழுதவேண்டிய இடங்களில் குறுகிய ஒலியுள்ள எழுத்துக்களையும் எழுதுகிறார்கள். குறிலையும் நெடிலையும் அருகருகே பார்த்தும் படித்தும் எழுதியும் பழகாததின் குறையே குழந்தைகள் விழைக்குமிப்பெரும் பிழைகளுக்குக் காரணமாகும்" என்று கருதுவோருமுளர்.

குழந்தைகளின் கை வேலை

பூநூல் கைப்பை



10" × 6" உள்ள ஒரு அட்டைத்துண்டு எடுத்துக்கொள்ளவும். அதில் o வை மத்தியமாக வைத்துக்கொண்டு $4\frac{1}{2}$ அங்குலம் அரை வட்டமுள்ள ஒரு அரை வட்டம் போடு. பிறகு படம் 1-ல் காட்டியது போல,

மூலை மூலையாக அல்லது இடுக்கு இடுக்காக காணும்படி வெட்டிக்கொள். அந்த மூலைகள் ஒற்றைப்படையாகவே யிருக்கட்டும், சுமார் 19 இருக்கலாம்.

ஒரு அங்குல வட்டமுள்ள இரண்டு தந்த வளையங்கள் எடுத்து அட்டையின் முன் புறம் ஒன்று அதேமாதிரி பின் புறம் ஒன்றாக வைத்துத் தைத்துக்கொள். இவை o வைச் சுற்றிலும் இருக்கட்டும். பிறகு கெட்டியானதும் மெல்லியதுமான நூலை ஊசியில் கோத்து s என்ற விடத்தில் ஒரு வளையத்தில் முடிச்சுப் போடு. பிறகு நூலை t என்ற இடுக்கு வழியாய்க் கொண்டுவா. அந்த நூலையே பின்பக்கமாகக் கொண்டு வந்து பின் பக்கத்து வளையத்தின் கீழ் நுழைத்து முன்பக்கம் கொண்டு வா. மறுபடி முன் பக்கத்து வளையத்தின் கீழ் நுழைத்து முன் பக்கம் கொண்டு வா. மறுபடியும் முன்பக்கத்து வளையத்தின் கீழாக இரண்டாவது இடுக்கு வழியாகக் கொண்டுசென்று மறுபடி பின்புறத்து வளையத்தின் கீழ் வந்து இரண்டாவது இடுக்கு வழியாகத் தாண்டி மேல் பக்கம் வரட்டும். இம்மாதிரி எல்லா இடுக்கு வழியாகவும் நூல் வரட்டும், இம்மாதிரி நூலைச் சுற்றிவருவதற்கு நீண்ட நூலாகவே முதலில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

படம் 2 ல் காட்டியபடி பிரிவில் உண்டை நூல் போடுவது போல் பின்ன வேண்டும். a பாவு மேல் அதே நூலைக்கொண்டுவா, பிறகு b யின் கீழ்ச்செல், மறுபடி c யின் மேல்போ, பிறகு d யின் கீழ்வா அதேமாதிரி மாற்றி மாற்றி இடதுபக்கம் s வரையில் நூல்போட்டு வந்துவிடு. பிறகு s மீது செலுத்தி அதன் கீழேயே கொணர்ந்து, t க்கு மேலும் u க்குக் கீழுமாகவும், v க்கு மேலும் அம்மாதிரி அளந்து கோடிவரையிலும் பின்னிக்கொண்டுவா. இம்மாதிரி நீ கொஞ்சம் செய்யப் பழகவேண்டும். (படம் 3). ஒவ்வொரு சமயம் ஒரு இழைபோடும்பொழுது அதை வளையத்தோடு நெருக்கிக்கொண்டு வரவேண்டும். இம்மாதிரி 3, 4 தடவை செய்தபிறகு இந்த நூலை அறுத்துவிட்டு வேறு வர்ண நூல் உபயோகப்படுத்து. இதேமாதிரி அட்டைமுழுமையும் தெரியாதிருக்கும்படி செய்து கொண்டுவா. ஒருபாகம் முடிந்த பிறகு அடுத்தபாகத்தை எடுத்துக் கொள்ள முதலில் 3, 4 இழையை சாதாரண நூலால் போட்டுக்கொள். மறுபடி வர்ணநூல் எடுத்துக்கொள். இந்தப்பக்கம் முழுமையும் வர்ணநூலால் பின்னி விடு.

பிறகு அட்டையோடு வளையங்களைச் சேர்த்துக் கட்டின கட்டை அறுத்துவிடு. உள்ளே உள்ள அட்டையை கொஞ்சமாக நறுக்கி அல்லது கிழித்துதெரிந்துவிடு. இப்பொழுது ஒரு நேர்த்தியான பை தோன்றும். உன்புஸ்தகம், பென்சில், தட்டு முட்டு சாமான்களை இந்தப் பையில் வைத்துக்கொண்டு சந்தோஷப்படு. இது நீயே போட்டபை ஆகவே உனக்கு வெகு சந்தோஷமாகவிருக்குமல்லவா.

All Rights Reserved.

கே. சுவர்ணவல்லி

பத்திராதிபர் குறிப்பு

ஆசிரியர்களா காரணம்?

சென்ற ஜூலை 23-ந் தேதியன்று கோவையில் நடந்த ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டில் நமது ராஜதானி கல்வி இலாகா தலைவர் கனம் R. M. ஸ்டாதம் துரை அவர்கள் ஒரு பிரசங்கம் செய்துள்ளார். அவர் அதில் முக்கியமாக வெளியிட்டது ஆரம்பக் கல்வி முன்னேற்றமடையாமல் இருப்பதற்கும், வீண் செலவு, தேக்கம் முதலிய தீமைகளுக்கும் ஆசிரியர்களே முக்கிய காரணம் என்பதே. ஆசிரியர்கள் தங்கள் வேலையை ஊக்கத்துடன் செய்வதில்லை யென்றும், பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங்காகப் போவதில்லை யென்றும், சரியான முறையில் போதிப்பதில்லை யென்றும், பாலர்களின் முன்னேற்றத்தைக் கருதி தமது தொழிலைப் புரிவதில்லை யென்றும் ஆசிரியர்களுக்கு தமது மாணவர்கள் பெயர் கூட தெரியாதிருக்கிறதென்றும் இன்னும் இவைபோன்ற பல குற்றங்கள் ஆசிரியர்கள் மீது சாட்டினர். சில காலமாக நமது கல்வி இலாகா தலைவர் பல ஊர்கள் சென்று கல்விச் சீர்த்திருத்தம் அவசியமென்பதை சில நாட்களாக ஜனங்களுக்கு எடுத்துரைத்து வருகிறார்கள். கல்வியின் முன்னேற்றத்துக்கு இவ்வளவு சிரத்தை தலைவர் காட்டுவது மிகவும் பாராட்டத் தக்கதே. அவர் இந்தியக் கல்வி விஷயத்தில் பல துறைகளிலும் மிக்க அனுபவம் வாய்ந்தவர். நமது ராஜதானியில் மட்டுமல்லாமல், மற்ற இந்திய துரைத்தனத்தாரிடம், கமிஷனர் வேலை பார்த்தபோதும், ஸைமன் கமிஷனுக்கு உதவியா யேற்படுத்தப்பட்ட ஹார்டாக் கமிட்டியாரின் காரியதரிசியாயிருந்த பொழுதும், இவருக்கு அகில இந்திய அனுபவம் ஏற்பட்டது நமது ராஜதானிக்கு ஒரு அதிர்ஷ்டமென்றே கருதவேண்டும். நமது ராஜதானியில் விசேஷ செலவிட்ட போதிலும் கல்வி முன்னேற்றமடையாதிருப்பதால் அவருக்கு திகைப்பு உண்டாவது ஒரு ஆச்சரியமில்லை. ஆயினும் இவ்வளவு அனுபவம் வாய்ந்தவர், சாதாரணமான ஆரம்ப ஆசிரியர்களே இக்குறைகளுக்குக் காரணம் எனப்பொதுஜனங்கள் நினைக்கும்படிப் பேசுவது ஆசிரியர்களுக்கு மாத்திரமில்லை, பொது ஜனங்களுக்கே திகைப்பையும் வியப்பையும் உண்டாக்கிவிட்டது. ஆரம்ப ஆசிரியர்களுக்குச் சம்பளம் எவ்வளவு குறைவானதென்பதும், ஆசிரியர்கள் தம் தொழிலைச் சரிவர புரியவேண்டிய வசதிகள் இல்லாமலிருப்பதும், ஆசிரியர்களின் சொல்ப சம்பளமும் பல மாதங்களுக்குக் கொடுபடாமலிருப்பதும், ஆசிரியர்கள் ஒருகாரணமுமின்றி பல இடங்களுக்கு அடிக்கடி மாற்றப்படுவதும், தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் திண்டாட தேர்ச்சியில்லாதவர்கள் ஏராளமாக ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறதும் நமது கல்வி இலாகாத் தலைவருக்குத் தெரிந்த விஷயங்களே. இம்மாதிரி யிருந்தால் முன்னேற்றம் எங்கிருந்துவரும். அம்மாதிரி இருப்பதற்கு யார் காரணம்? தலைச்சேரி

யில் செய்த பிரசங்கத்தில் கனம் ஸ்டாதம் துரையவர்களே இக் குறைகளை எடுத்துக் காட்டி, அவைகளை நீக்குவதின் அவசியத்தை துரைத்தனத்தார் அறிவார்கள் என்றும் அதற்குத் தகுந்த திட்டங்கள் தயாரிக்கப் போகிறார்களென்றும் கூறியுள்ளார். அப்படியிருக்க கோவையில், ஆசிரியர்களின் வறுமையும், தொழிற் கஷ்டங்களும் தேக்கத்துக்குக் காரணமெனச் சொல்வது தப்பானது என்று கூறியது சரியாகுமா? வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு, வறுமையையும், தொந்திரவுகளையும் பொருட்படுத்தாமல், வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களின் பொறுமைகளாக வில்லையா?

பதினாயிரக்கணக்கான ஆசிரியர்களிருக்கையில், அவர்களுடைய சௌகர்யங்களைக் கவனித்தாலல்லவோ பள்ளிக்கூடங்களில் பழுது இல்லாமலிருக்கும். ஆசிரியர்கள் கேட்பது எல்லாம் ஜீவனத்திற்கு வேண்டிய சம்பளமும், செவ்வனே தொழிற் புரிய உதவி தானே. இன்னமும் தலைவர் சொல்லிய ஸர்விஸ் விதிகள் வெளிவரக் காணோம். பல வருஷங்களாகச் சொல்லமுடியாத கஷ்டங்களை உபாத்தியாயர்கள் அனுபவித்து வருவதைப் பலர் அறிந்திருக்கிறார்கள். சீர்திருத்த விதிகள் அமுலுக்கு வந்தபின் குறைகூறுவது நியாயமாகும். பல வருஷங்களாக சுமார் 80000 ஆரம்ப ஆசிரியர்கள் வேலை பார்த்து வருகிறார்கள். இவர்களின் தொழில் முறையை பன்முறை கல்வி இலாகா அதிகாரிகள் மேற்பார்வையிட்டு வந்திருக்கிறார்கள். அதிகாரிகளின் ஆதீனத்தின்கீழ் பல ஆரம்ப ஆசிரியச் சங்கங்களிருக்கின்றன. அதிகாரிகளும் சங்கங்களும் இக்குறைகளை நீக்க முயன்றனவா! அவர்கள் தொழில் முறையை சீர்திருத்த இவ் வதிகாரிகள் என்ன உபாயங்கள் செய்தார்கள்? ஆசிரியர்களிடம் குறை இருக்கலாம். அக் குறைகள் பலவற்றிற்கு கல்வி அதிகாரிகளும் காரணமென்று சொல்லலாம். ஆசிரியர்களை குறைகூறுவதால் சீர்திருத்தமேற்படாது.

நமது ராஜதானியில் கல்வி முன்னேற்ற மடையவேண்டுவது எல்லோருடைய முக்கிய நோக்கமானால், ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டுவதை தலைவரும் நிறுத்த வேண்டும். ஆசிரியர்களுடன் கலந்து, ஆசிரியர்களைக் கௌரவப்படுத்தி, சரியான முறையில் சீர்திருத்தங்கள் கொண்டுவர முயலவேண்டும்.

நம் நாட்டில் ஆரம்ப ஆசிரியர்கள் ஒன்றுசேர்ந்து இங்கிலாந்தில் உள்ள 18 நேஷனல் யூனியன் என்றது போன்ற சங்கம் ஸ்தாபித்து இருப்பார்களானால் பலவித குறைகளுக்கும் உபாத்தியாயர்கள் ஜவாப்பில்லையென்று R. M. ஸ்டாதம் துரை அவர்களுக்கு எளிதில் காட்ட முடியும். வெறுங்கை முழம்போடாதென்பதை அதிகாரிகள் அறியாதுபோலிருப்பதே எல்லாக் குறைகளுக்கும் காரணம். ஆகவே, கல்வி முன்னேற்றம் ஆசிரியர்களின் கௌரவம், தொழிற்சாதனங்கள் முதலியவைகளைக் கருதி, நமது ஆரம்ப ஆசிரியர்கள் தென் இந்தியச்சங்கத்தில் சேர்ந்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். அதிகாரிகளும் இது விஷயமாக சௌகர்யும் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறோம்.

147644

Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.

English Conversation Book I	for Class IV
do. do. Book II	do. V
Arithmetic for Beginners	in Tamil
Domestic Hygiene	in Tamil
Stories from Indian History	for Class V
Tamil Primer for Beginners ...	... ...

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER *(Retired Teacher)*

2/12-A, Alangatha Pillai Street : .: Triplicane, Madras.

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

The Coronation English Readers

Edited by Prof. J. C. ROLLO, M.A.

Principal, Maharaja's College, Mysore

Primer, Part I	(3rd Class)	Annas 3
Primer, Part II	(4th Class)	Annas 3
Primer, Parts I & II		Annas 6
Book I	(5th Class)	Annas 6
Book II	(1st Form)	Annas 8

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

B. G. PAUL & Co., Educational Publishers

12, Francis Joseph Street, G.T., MADRAS

Regd. No. M. 3473

நீங்கள் செலுத்துவது

மாதம் ஒரு ரூபாய்

உங்கள்

வார்சுகளுக்குக் கிடைப்பது

ரூ. 250-லிருந்து ரூ. 375-வரையில்

தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில்

உடனே சேருங்கள்

41, சிங்காராச்சாரி தெரு,

திருவல்லிக்கேணி, மதருஸ்.

கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A.
For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

ஈஸ்வர௵ ஆவணிமீ
- SEPTEMBER 1937 -

பிரசுர கர்த்தர்கள்:

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

41, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, மதருஸ்.

வருஷ சந்தா ரூ. 2—0—0

தனிப் பிரதியின் விலை 0—4—0

பொருளடக்கம்

பக்கம்

1. பாஷையும் பாஷைப்பாட புத்தக விஷயங்களும் ... 109
—எஸ். ஜெகன்னாதன்

2. ஆரம்பக் கல்வி 120
—K. S. சந்திரசேகரன் M.A.L.T.,

3. குழந்தைகளின் கைவேலை 131
—கே. சுவர்ணவல்லி

4. பத்திராதிபர் குறிப்புகள் 138

கௌரவப் பத்திராதிபர்கள்

S. K. யக்ஞநாராயண அய்யர்
M. S. சபேச அய்யர்
M. S. கோடீஸ்வரன்
G. சீனுவாசாசாரியார்
V. K. சௌரிராஜன்
Mrs. கிரிசுந்தரி
S. T. ராமானுஜம்
V. குருசாமி சாஸ்திரிகள்
G. P. ஜேம்ஸ்
K. S. செங்கல்வராயன்
A. சுந்தரேச அய்யர்
Rev. A. ஷ—ல்ஸ்
M. J. சற்குணம்
S. நடராஜன்

—நிர்வாகப் பத்திரிகாசிரியர்

பாலர் கல்வி

தொகுதி 2	1937 ஞு செப்டம்பர் மீ ஈஸ்வர ஞு ஆவணி மீ	பகுதி 5

பாஷையும் பாஷைப்பாட புத்தக விஷயங்களும்

14 T644
சென்னை-600 0

S. ஜகந்நாதன், டீசர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை

பாஷைப் பாட திட்டத்தின் நோக்கமானது எப்படி காலக்கிரமத்தில் மாறி மாறி வருகின்றது என்று முன்பு சொல்ல நேரிட்டது. அதாவது வந்து போன கடிதத்தைப் படிக்கத் தெரிந்து கொள்வது, ஐந்தாவது வகுப்புப் புஸ்தகத்தைப் படித்துத் தெரிந்து கொள்வது, தினசரிப் பத்திரிகையிலுள்ள சில பகுதிகளில் படிக்கத் தெரிந்துகொள்வது என்று படிப்படியாக மாறி வந்திருக்கிறது. மேலும் தினசரிப் பத்திரிகை வார்த்தைகளுக்கும் பாட புஸ்தகத்து வார்த்தைகளுக்கும் ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. வேற்றுமையே அதிகமாயுள்ளன. இதற்குக் கரணம் பாட புஸ்தகத்துப் பாடங்களுக்கும் தினசரிப் பத்திரிகை விஷயங்களுக்கும் வித்தியாசமிருப்பதனால் தான் பாட புஸ்தகங்களில் பாஷை வளர்ச்சிக்குமன்றி பொது அறிவு வளர்ச்சிக்கும் அதிக மேம்பாடு காண்பிக்கப்பட்டிருக்கிறது. பொது அறிவு சம்பந்தமான விஷயங்களை சில பாடங்களில் அமைத்துக்கொண்டுள்ளார்கள். முக்கியமாக அவை பொருள், பாடம், தாவரம், ஜீவவர்க்கம், தேச சரித்திரம், பூகோளம், இயற்கைத் தோற்றம், சுகாதாரம், ஐக்கியம், அரசியல் போன்ற சிலவைகளுக்குள் அடங்கியுள்ளன. இவ்விஷயங்களில் சில விஷயங்களே தினசரிப் பத்திரிகையில் காணப்படுகின்றன. பாட புஸ்தகங்களில் பெரியார் சரித்திரம், பண்டிகைகள், புராணக் கதைகள், கட்டுக் கதைகள் இவைகளும் காணப்படுகின்றன.

பொது அறிவு விஷயங்களும், பாஷையும்

பொது அறிவு சம்பந்தமான பாடங்களை பாஷைப் பாடத்தில் சேர்ப்பது என்பது தற்கால வழக்கமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு

147644 ... 600 008

விஷய சம்பந்தமான ஒவ்வொரு பாடமாவது பாஷைப் பாடத்தில் இருக்க வேண்டும். ஏனெனில் ஒரு புஸ்தகமாவது கிராமக் குழந்தை படித்தாக வேண்டும் என்ற கொள்கை முன் நின்றுகொண்டிருந்தது. ஆயினும் பொது அறிவு விஷயங்களைக் கற்றுக் கொடுக்க பிரத்தியேகமான நேரமும் கால அட்டவணையில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. பாஷைப் பாட நேரத்தில் பொது அறிவு பாடத்தைப் பற்றிக் கற்றுக்கொடுக்காமல் எடுத்துக் கொண்ட விஷயத்தை பரீக்ஷை செய்து பார்க்கவும், நேரில் நிதர்சனமாகக் கற்றுக் கொடுக்கவும் பெரும்பாலான நேரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆகவே பாஷை வளர்ச்சிக்கு ஏற்ற நேரம் எடுத்துக்கொள்ள சாத்தியப்படவில்லை. இம்மாதிரி பாடங்கள் மூலமாகவும் பாஷையில் அதிகம் ஊக்கமும் உற்சாகமும் கொடுக்கச் சாத்தியமுமில்லை. மேலே சொன்ன நோக்கங்களோடு பாஷையில் தேர்ச்சியடையும்படி செய்வது என்பதும் ஒரு பொது நோக்கமாகத்தான் இருக்கவேண்டும். அது வெளிப்படையாகக் குறிக்கப்படவில்லை. அது முக்கியமான பெருத்த நோக்கமாகத் தான் இருந்திருக்க வேண்டும்.

செய்யுளும் வசனமும்

முன்னுளில் புலவர்கள் செய்யுள் மூலமாகவே பாஷையை உயர்ந்த ஸ்திதிக்குக் கொணர்ந்து வைத்தார்கள். நாளாக நாளாக ஜனத்தொகை அதிகமாக அதிகமாக எல்லோரும் அச்செய்யுள் மூலமாகப் பாஷையைக் கற்றுத் தேர்ச்சியடைவது என்பது சாத்தியமாகவில்லை. ஆகவே வசன ரூபமான புஸ்தகங்கள் வெளி வரலாயின. இப்புஸ்தகங்களுக்கும் நடை, பாஷை, பத்திரிகை பாஷை இவைகளுக்கும் தாரதம்மியம் காணப்படலாயின. சுத்தத் தமிழ், பண்டிதர் தமிழ் என்பவைகளைப் பொது மக்கள் சுலபமாகக் கிரகிக்கவில்லை. ஆகவே இதிலிருந்தும் சற்றும் விலகி வேறொரு மார்க்கத்தைக் கைப்பிடிக்க நேரிடுகிறது.

பெற்றோரும், குழந்தைகள் பாஷையும்

ஆரம்பத்தில் தாய் தகப்பனுரிடமிருந்தே குழந்தைக்குப் பாஷா ஞானம் ஏற்படுகிறது. காலக் கிரமத்தில் வீட்டில் பல பேர் பேசும் பாஷையைக் கேட்டுக் குழந்தையின் பாஷையும் வளருகிறது. சில சந்தர்ப்பங்களில் தாய் தகப்பன்மார்கள் தமக்குத் தெரியாமலே தீங்கு புரிய நேரிடுகிறது. கோபத்தில் பிறரை அதட்டுதல், விரட்டுதல், மிரட்டுதல், வெய்தல் முதலானவை சம்பந்தப்பட்ட பாஷையை உபயோகிக்கிறோம். அவற்றையும் குழந்தை கவனிக்கிறது. சில சமயங்களில் தன்னையும் இம்மாதிரி பயப்படும்படி செய்து விடுவார்களோ என்ற ஏக்கத்தால் உள்ளொன்று வைத்துப் புறமொன்று சொல்லப்பார்க்கிறது.

உங்காத்து ஜலம் கொடு, குடிக்கிறேன்.

உங்காத்து சோப்பு கொடு, கொண்டுவைத்து விடுகிறேன்.

உள்ளதைச் சொல்லுவதற்கு இடங்கொடுக்கவேண்டும். சில சமயங்களில் உள்ளதை உள்ளபடி சொல்லுகிறது நமக்கு சந்தோஷத்தைத் தருகிறது. சிலர் சாமர்த்தியமாகச் சொல்லி ஏமாற்றித் தப்பித்துக் கொண்டதைப்பற்றியே கொண்டாடி சந்தோஷிக்கிறார்கள். அதனால் பின்னால் பாதகம் ஏற்படும். குழந்தையும் அம்முறையையே பின்பற்ற முன் வந்து விடும்''. ஆகவே சரியான பாஷையை உள்ளத்தில் உள்ள எண்ணத்தையே பேச்சு மூலமாகச் சொல்ல பெற்றோர்கள் இடங்கொடுக்க வேண்டும். மேலும் மரியாதை, அன்பு, வணக்கம், பிரியம், பக்தி, தயை நிரம்பிய பேச்சுகளும் கற்க இடங்கொடுக்க வேண்டும். இவைகளை விளங்கும் பாடங்கள் பாஷைப் பாடங்களில் ஆரம்ப முதற்கொண்டே சிறு சிறு பாடங்களாகச் சேர்க்கப்பட வேண்டும். "சொன்னதைச் சொல்லுமாம் கிளிப்பிள்ளை" முனிவர் ஆசிரமத்துக் கிளிப்பிள்ளை வந்தவர்களை சௌக்கியமா வாருங்கள் உட்காருங்கள் என்று உபசாரம் செய்யும். கசாப்புக் கடைக்காரன் கிளி "அடி, பிடி, குத்து கொல்லு" என்று சொல்லும். சகவாசம், பழக்கம் இவைதான் காரணம். குழந்தையும் ஒரு கிளிப்பிள்ளை தான். சகவாச தோஷத்தால் பாஷை நல்லதும் கெட்டதுமாக மாறி விடுகிறது. பெற்றோர்கள் இதில் பெருத்த பாத்தியதையுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

கால நிலைமையை அறிதல் அவசியம்

உலகத்தில் சூரிய சந்திராள் தவிர மற்றவர்கள் ஒருவித மாறுதலையே அடைந்து வருகிறார்கள். ஒவ்வொரு துறையிலும் மாறுதல் ஏற்படுகிறதைக் காண்கிறோம். நமது கல்வித் துறையிலும் மாறுதல் ஏற்படும். நாமே அதை உணர்தல் ஏற்றதே.

i. நான் ஒரு தடவை காலஞ்சென்ற சாம்பியன் வார்த்தை திட்டத்தைப்பற்றி குறிப்பாகச் சொன்னேன். அந்த திட்டத்தோடு புஸ்தகத்திலுள்ள வார்த்தை திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கிற காலத்தில் அடியிற்கண்ட வார்த்தைகள் அவர்கள் எடுத்துக்கொண்ட வாசக புஸ்தகத்தில் இருக்கவில்லை.

அக்கிராசனுதிபதி	உத்தேசம்	சமீபம்	நியமி
அடகு	உரிமை	சரியாக	பத்திரிகை
அடிக்கடி	கட்டு	சாயம்	பிரசங்கம்
அதிகாரம்	கதர்	சிபார்சு	முதலிய
			முஸ்லீம்
அனுதாபம்	கரகோஷம்	சுய ஆட்சி	யோகம்
அறிக்கை	தெரிவி	சுயேச்சை	வந்தனம்
அனுமதி	கலை	செய்தி	விக்கிரகம்
ஆதரி	காரியதரிசி	சேர்	வியாபாரம்
ஆக்ஷேபம்	குறிப்பு	தகுந்த	லாபநஷ்டம்
ஆஜர்	கேள்வி	தயாரி	விவரம்

JL
T15m21,ல36PA N37.2.4-5

ii. தினசரிப் பேச்சுப் பழக்கத்தில் அடியிற்கண்ட சொற்களை உபயோகிக்க நேரிடுகிறது. இவை புஸ்தகங்களில் காணப்படவில்லை. இவை சரியான பதங்களாக விருப்பின் இவற்றை ஏன் படிக்கின்ற பாஷையிலும் சேர்த்துக்கொள்ளலாகாது?

தட்டுத்தடுமாறி	கொஞ்சகஞ்சமாக
கூளம் குப்பை	தாறுமாறாக
பொய்யும் புளுகும்	மட்டு மரியாதை
புளுகும் புனைச் சுருட்டும்	தட்டு முட்டு
அரை குறையாக	கண்டதுண்டமாக
சுக்குத் தூளாக	எட்டிக்குப் போட்டி.

iii.

வாடு	வெம்பு
வதங்கு	கறுகி
அழுகு	காய்ந்து
அவிந்து	வெந்து
கனிந்து	
நைந்து	

இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு நிலையைக் காட்டுகிறது போல ஒவ்வொரு சுபாவத்தைக் காட்டும் வார்த்தைகளைச் சேர்த்துக் காட்டி பொருள் அல்லது நிலைமையை விளக்குவது அவசியம்.

சம்பாஷணையில் இம்மாதிரி சேர்க்கக் கூடிய வார்த்தை வரிசைகள்.

i. நனை, கும்மு, கசக்கு, தோய், அலசு, முறுக்கு, பிழி, மடி, உலர்த்து, உடுத்து, போர்த்துக்கொள்.

ii. புடை, சலி, மாஅரை, மாஇடி, சொழி, தூவு, கல. தூறுகிறது.

iii. முறுக்கு, நசுக்கு, பிழி, தெளியவை, கரையவிடு, கலக்கு, தேங்கவிடு, வடிக்கட்டு, ஆற்று, ஊற்று, ஒதுக்கு.

iv. பிள, ஒடி, வெட்டு, சீவு, உரி, துண்டுபோடு, முறி, நறுக்கு, அறு.

v. சிந்து, கொட்டு, உடை, பொறுக்கு, தேடு, விடு, சேர், கூறு, கட்டு, நிரவு.

vi. பின்னு, தேய், அலசு, துவட்டு. முடிபோடு, அவிழ், சொரி, தடவு.

vii. அடி, உதை, கிள்ளு, பிராண்டு, மோது, திருகு, உரி, பிரி, மடக்கு, வளை.

viii. அலம்பு, கொப்பளி, தேய், எப்பம், கொட்டாவி, தும்மு, வாந்தியெடு, சக்கு, மூச்சுவிடு, இறுமு, துப்பு, உமி, அழு, கத்து, புலம்பு, கதறு, கனை.

ix. காய்ச்சு, கடை, பிரையிடு, திரிந்து போகிறது.

x. உறுமு, மௌனமாயிரு, முக்கு, பாசாங்கு செய், வம்பு பேசு, ரகசியம் பேசு.

xi. ஊறவை, வேகவை, கொதிக்கவை, வறுத்து, தாளி, வதக்கு, துவட்டு.

xii. எம்பு, குதி, தாண்டு, பறி, உலுக்கு, ஆய்கிறது, கோக்கிறது, கொய்கிறது.

xiii. தோண்டு, வெட்டு, குடைந்து செல், இழை, துளை, செய், மட்டமாகச் செய், நிரப்பு.

xiv. போர்வை, மறைப்பு, கட்டி, விரிப்பு, திரை.

xv. அடுக்கு அடுக்கு, வரிசை வரிசை, எதிர் எதிர், முன்பின், பக்கம் பக்கமாக.

வடமொழிப் பதங்களும் எழுத்துக்களும்

இவ்விஷயத்திலும் வேறுபட்ட அபிப்பிராய மிருந்து வருகிறது. சிலர் இவற்றை விலக்கவேண்டும். தமிழ் தனிமொழி. இவ்வார்த்தைகளை விலக்கியே அவைகளுக்கேற்ற சுத்தத் தமிழ் வார்த்தைகள் அமைத்துக் கொள்ளலாம் என்கின்றனர். மற்றொரு பிரிவார் தமிழ் எழுதுவதில் பெரும்பாலும் சம்ஸ்கிருத பதங்களைப் பிரயோகிக்கின்றனர். இதுவும் தவறு என்றே நினைக்கிறேன். முற்காலத்து தமிழ் நூல்களில் வடமொழிப் பதங்களும் எழுத்துக்களும் கலந்துதான் தமிழ் எழுதப்பட்டிருக்கின்றன. தினசரிப் பழக்கத்தில் சகஜமாக வழங்கப்படுகிற பதங்களை புஸ்தகத்திலும் புகவிட்டு அவற்றைப் பரவ விடுவது இயல்பாகும். இரண்டொரு பதங்களில் சுத்தத் தமிழ் எழுத்தைச் சேர்ப்பதைவிட ஒரு கிரந்த எழுத்தைச் சேர்ப்பதினாலே பதத்திற்கு ஒரு இனிமை ஏற்படுகிறது. மேலே சொன்ன இவ்விஷயங்கள் தர்க்கத்திற்கு மாத்திரம் உபயோகப்படுகின்றனவேயன்றி பாஷையை வளர்க்க எண்ணமுள்ளவர்கள் வடமொழிப் பதங்களையும் எழுத்துக்களையும் சமயத்திற்கேற்றவாறு சேர்த்துக்கொண்டே தான் வருகிறார்கள்.

தினசரிப் பாஷைப் பழக்கத்தில் ஆங்கிலப் பதங்கள் வெகு சீக்கிரமாகவும் சுலபமாகவும் தமிழ்ப்பதங்களாகி விடுகின்றன. (உ-ம்). சைகிள், சோடா, சிம்னி, பென்சில், ரப்பர், ஸ்டீல், சினிமா. இங்கு காட்டிய பிரகாரம் பத்திரிகைகளிலும் புஸ்தகங்களிலும் எழுதப்பட்டு வருகின்றன. மற்றும் சில ஹிந்துஸ்தானிப் பதங்களும் தமிழ்ப் பதங்களாக மாறிவிடுகின்றன. பாஷை அபிவிருத்திக்கு இம்மாதிரி ஏற்பாடுகள் வேண்டித்தான் இருக்கின்றன. ஆரம்பப் பள்ளிக்கூட உபாத்தியாயர்களும் இவைகளைக் கவனித்தல் அவசியமாகும்.

சில மாதிரிப் பாடங்கள்

முதல் வகுப்பு இறுதியிலோ அல்லது இரண்டாம் வகுப்பு ஆரம்பத்திலோ கற்பிக்கப்படும் வாசக பாடங்கள் மிகச் சிறியவையாய் அமைக்கப்படவேண்டும். எல்லாப் பிள்ளைகளும் ஒருமுறை அந்தப் பாட நேரத்தில் உபாத்தியாயர் முன் வாசிக்கக்கூடியதாய் அமைக்கப்படவேண்டும்.

சம்பாஷணைக்கு ஏற்றவாறு படங்கள் அமையவேண்டும். ஒவ்வொரு பாடத்திலும்ஏதாவது புதுப் பதங்கள், எழுதுவதற்கு ஏற்ற பயிற்சிகள் இவையும் கலந்திருக்க வேண்டும். சாதாரணமான கொச்சைப் பாஷையை திருத்தி யமைக்கவும், ஒரு புது விஷயம் தெரிந்துகொள்ளக் கூடியவையாயும் இருக்கவேண்டும். ஒவ்வொரு உபாத்தியாயரும் பெற்றோர் என்ற நிலைமையில் தன் பிள்ளை எங்தெந்த விஷயங்களை நன்றாக கற்றுத் தெரிந்து கொள்ளவேண்டும். எவற்றை வாசிக்கத் தெரிந்துகொண்டால் படிப்பில் ஒரு சந்தோஷம் ஏற்படும் என்று கவனிப்பாரானால் நல்ல எண்ணங்கள் மனதிற் தோன்றும். அவைகளைத் திரட்டி தன் பிள்ளையின் தேர்ச்சியில் உபயோகிக்கிறார். குழந்தைகள் இராஜ்ஜியத்திலும் இவை பயன்பட வேண்டுமென்றும் அவர் நினைக்கிறார். ஆகவே உபாத்தியாயர்கள் மூலமாகவே அவை குழந்தைகள் சமூகத்திலும் பரவ ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. இப்பாடங்கள் வாசக புஸ்தகத்தில் இருக்கவேண்டுமென்பது அவசியமில்லை. எல்லாப் பாடங்களும் ஒரு சிறு புஸ்தகத்தில் அமைக்கப் படுவது கூடாத காரியம். ஆகவே இவை தனித்தனி அட்டைத்துண்டுகளில் எழுதி வைத்துக்கொண்டு பிள்ளைகளுக்குக் கொடுத்து பேச்சுப் பழக்கம், வாசிப்புப் பழக்கம், எழுத்து பழக்கம் இவற்றில் தேர்ச்சியடையும்படி செய்ய வேண்டுமென்பது அடியேனது தாழ்ந்த விருப்பம்.

பாடம் 1

மாமி! இதோ உங்கள் பாத்திரம்!

பத்திரம்! பத்திரம்!!

அம்மா உங்களிடம் பத்து ரூபாய் கொடுக்கச் சொன்னாள்.

இதோ பத்து ரூபாய் வாங்கிக்கொள்ளுங்கள்.

பணம் பத்திரம், பத்திரம்.

குழந்தாய் நீ சமத்து. ஜாக்கிரதையாய்ப் போய்வா.

பாடம் 2

குழந்தாய்! கொஞ்சம் ஜலம் கொண்டுவா.

அம்மா! என் கை தவறி பாத்திரம் கீழே விழுந்துவிட்டது. ஜலம் கொட்டிவிட்டது.

தெரியாமல் செய்துவிட்டேன்.

நீ கோபிக்கவேண்டாம்.

இனிமேல் ஜாக்கிரதையாய் இருக்கிறேன்.

பாடம் 3

குழந்தாய் மெதுவாய்ச் சாப்பிடு.

எல்லோருக்கும் சாதம் பரமாறின பிறகு சாப்பிடு. எல்லோரும் எழுந்திருக்கும்போது எழுந்திரு.

எச்சில் கையை உதறாதே.

சாதத்தை மென்று சாப்பிடு.

தீர்த்தம் குடிக்கும்பொழுது மெதுவாய்க் குடி.

சாப்பிட்ட பிறகு கை, வாய், கால் இவற்றை அலம்பு.

பாடம் 4

அம்மா! அம்மா!! மாமா வருகிறார்.

அண்ணா, வாருங்கள்! உட்காருங்கள்.

அம்மா சௌக்கியமா?

அப்பா சௌக்கியமா?

குழந்தைகள் சௌக்கியமா?

குழந்தாய்! மாமாவுக்கு விசிறி கொண்டுவா.

கை கால் அலம்ப ஜலம் கொண்டுவா.

குடிக்க தீர்த்தம் கொண்டுவா.

வெற்றிலைப் பாக்குத் தட்டு கொண்டுவா.

பாடம் 5

ஸரஸ்வதி! நான் ஊருக்குப் போய் வருகிறேன்.

நீ சமத்தாய் இரு.

நீங்கள் ஜாக்கிரதையாய்ப் போய் வாருங்கள்.

ஊருக்குப் போனதும் கடிதம் போடுங்கள்.

நான் சமத்தாய் இருக்கிறேன்.

பாடம் 6



புஸ்தகத்தின் மீது உன் கால் படக்கூடாது கால் பட்டால் புஸ்தகத்தைக் கையால் தொட்டு கண்களில் ஒத்திக் கொள்.

நடக்கிற வழியில் ஒன்றையும் போடாதே.

சாமான்களை வைக்கவேண்டிய இடத்தில் வை.

குழந்தை, பெரியவர்களை இடறிக்கொண்டு போகாதே.

இடறிவிட்டால் அவர்களைத் தொட்டு கண்களில் ஒத்திக்கொள்.

பாடம் 7

யாரும் வீட்டு வாசலில் எச்சில் இலை குப்பை இவைகளைப் போடக் கூடாது.

வீட்டு வாசலில் குழந்தைகள் மலம் கழிக்கக்கூடாது.

குப்பைத் தொட்டியில் குப்பையைப் போடுங்கள். இவைகளைத் தவறி நடந்தால் ஐந்து ரூபாய் அபராதம்.

பாடம் 8

கை இல்லா முடவனாச்சே.

கண் இல்லா குருடனாச்சே.

மக்களைப் பெற்ற தாயே.

இந்த ஏழைக்குக் கொஞ்சம் சோறுபோடு அம்மா!

ஐயோ பாவம்! ஜானகி கொஞ்சம் சாதம் கொண்டு போடு.

கையும் இல்லை கண்ணும் இல்லை ஐயோ பாவம்!

நீங்கள் நன்றாய் இருக்கவேண்டும். உங்கள் குழந்தை குட்டிகள் சௌக்கியமாய் இருக்க வேண்டும்.

பாடம் 9

சுவாமிக்கு கோவிந்தம் போடடா கோவிந்தம்!

சுவாமி தர்மம் கொடுக்கிற கை எந்தக்கை?

சுவாமி தர்மம் கொடுக்கிற கையை முத்தம் கொடுத்து வா.

ஐயாவிடம் உனக்கு என்ன வேண்டும்.

தவிடு வேண்டுமா? பிண்ணாக்கு வேண்டுமா? புல் வேண்டுமா? வைக்கோல் வேண்டுமா? அரிசி வேண்டுமா? பணம் வேண்டுமா? ஐயா கட்டிக் கிழித்த பழசு வேண்டுமா?

பாடம் 10

அரச மரத்துக்கிளி ஆசாரம் பேசுங்கிளி பாலன் வடிவேலன் கிளி பாடுதுபார் எல்லோரும் பாருங்களே பாருங்களே.

பாக்கு மரத்துக்கிளி பதங்கள் மெத்தப் பாடுங்கிளி மரகதம் வளர்த்த கிளி மகிழ்வாக ஆடுதுபார் எல்லோரும் பாருங்களே பாருங்களே.

பாடம் 11

ராமா! ராமா!! ராமா!!!

குட்டிக் கரணம் போடு.

மரத்தின் மேல் ஏறு, தேங்காய்ப் பறி.

எப்படி குடத்தில் தண்ணீர் கொண்டு போவாய், காட்டு.

ஏ ராமா! லங்காபுரி கோட்டை தாண்டு.

ஐயாவிடம் பிச்சை வாங்கி வா.

ஐயாவுக்கு ஸலாம் போடு.

பாடம் 12

பச்சைக் கிளியே அடி சின்னி.
பவழக் கொடியே அடி சின்னி.
என்னைத் தொடர்தே அடி சின்னி.
என்பாவம் கொள்ளாதே அடி சின்னி.
ஆலமரத்தடியே அடி சின்னி.
ஆறு மாதம் கார்த்தேன் அடி சின்னி.
இலவமரத்தடியே அடி சின்னி.
எட்டு மாதம் கார்த்தேன் அடி சின்னி.
என் முகம் பாராயோ அடி சின்னி.
என்னை மோசம் செய்யாதே அடி சின்னி.

பாடம் 13

அம்மா நல்ல சமாசாரம் வரப் போகிறது.

சந்தோஷ சமாசாரம் வரப் போகிறது.

ஐயாவுக்குத் தொப்பை தள்ளுகிறது.

உங்கள் பெரியமகனுக்கு பெரிய வேலை வரப் போகிது.

ஒரு மாஸமாக நடக்கிறேனே. எனக்கு ஒரு பழந் துணி கொடுத்து அனுப்புங்கள். நான் போய் வருகிறேன்.

பாடம் 14

ஒருவன் பின் ஒருவனாகப்போ.

அப்பொழுது ஒரு நேர் வரிசையாய் போகலாம்.

ஒரு வரிசையாகப்போனால் அழகாய் இருக்கும்.

ஒரு வரிசைக்குள் நீ நுழைந்து போகாதே.

ஒரு வரிசையைக் கலைக்காதே.

உபாத்தியாயரிடம் வரும்பொழுது ஒருவன் பின் ஒருவராக வா.

பாடம் 15.

வாழைப்பழத் தோலியை நடக்கிற இடத்தில் எறியாதே.

வழுக்கி விழுந்தால் காயம் ஏற்படும்.

வாழைப்பழத் தோலியை ஒரு புறமாகப் போடு.

தோலியைப் பொறுக்கி குப்பைத் தொட்டியில் போட்டுவிடு.

பாடம் 16



நீ சாலையில் ஜாக்கிரதையாய் நடந்து செல்.

சாப்பிடுகிற கை எது காட்டு.

அதற்கு வலது கை என்று பெயர்.

சாலையில் நீ வலது கைப்புறம் போ.

சாலையின் ஓரமாகப் போ.

வண்டிகள் இடதுகைப்புறம்போகும்.

எதிரிலிருந்து வண்டி வருகிறதா என்று கவனி.

வண்டி வந்தால் சாலையின் ஓரமாக ஒதுங்கு.

சாலையின் குறுக்கே ஓடாதே.

வண்டிகள் வராத சமயம் சாலையைத் தாண்டிப் போ.

நீ சிறுவன், நீ சாலையில் ஜாக்கிரதையாய் நடந்து போகவேண்டும்.

பாடம் 17

சுவாமி! பகவானே!!

நான் சமத்தாய்இருக்கிறேன்

நான் கெட்டிக்காரனாய் இருக்க வேண்டும்.

என் அம்மா அப்பா சௌக்கியமாய் இருக்க வேண்டும்.

எல்லோரும் சௌக்கியமாய் இருக்க வேண்டும்.



எனக்கு நல்ல புத்தி கொடுக்க வேண்டும்.

உங்களை நான் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும்

பாடம் 18.

விளையாடு

விளையாடிக் கொண்டு

விளையாடிக்கொண்டிருக்கும் பொழுது

விளையாடிக் கொண்டிருக்கையில்

குழந்தாய்! நீ சாயங்காலம் நன்றாய் ஓடிவிளையாடு.

உன் தம்பி தங்கையுடன் விளையாடிக் கொண்டிரு.

குழந்தைகளே!..உங்களுக்குப் பந்து விளையாட ஆசையா? நீங்கள் பந்து விளையாடிக் கொண்டிருங்கள்.

நான் பந்து விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது உள்ளே ஒரு நாய் ஓடி வந்தது

நீ விளையாடிக் கொண்டிருக்கையில் என்ன ஓடி வந்தது?

பட்டம் பறக்க விடு.

பட்டம் பறக்க விட்டுக் கொண்டு

பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருக்கும் பொழுது

பட்டம் பறக்க விட்டுக் கொண்டிருக்கையில்

(Allrights Reserved:)

(அடுத்த விஷயம்: பாடம் சொல்லுவதும் பாடம் கேட்பதும்)

ஆரம்பக் கல்வி

[சென்ற மே மீ தஞ்சையில் கூடிய மாகாணக் கல்வி மகா நாட்டில் Rev. Milton G. Kuolt என்னும் பெரியாரின் ஆங்கில சொற்பொழிவின் சாராம்சம்]

[K. S. சந்திரசேகரன் M.A.L.T., மொழி பெயர்த்தது.]

[சமீப காலத்தில் ஆரம்பக் கல்வியைப் பற்றி பலவித அபிப்ராயங்களும், எண்ணங்களும், திட்டங்களும் வெளிவந்துள்ளன. ஆகையால் இச்சிறு வியாசத்தில், தற்கால இந்தியாவில் அனுஷ்டான முறையில் கொண்டு வரக்கூடிய சில மனவெழுச்சிகளை மட்டிலும் இங்கு குறிப்பிடுகின்றேன். இச்சொற்பொழிவில் சில மொழிகள் எவ்வித அர்த்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை முதலில் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும். ஆரம்பக் கல்வி என்பது 5, 6 வயது முதல் 11, 12 வயது வரையிலுள்ள சாதாரண குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வியாகும். அதாவது ஐந்தாம் வகுப்பு வரை கொடுக்கப்படும் கல்வியாகும். கட்டாயக் கல்வி என்பது மேற் கூறப்பட்ட கல்வியி னெல்லைக்குள் எம்முறையிலாவது குழந்தைகளைச் சேர்த்துக்கொள்வதாகும். அதாவது எவ்வளவு பிள்ளைகளை 5-ம் வகுப்பு வரை படிக்கச் செய்வதான, சாதாரணமாக எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகச் செய்வதாகும். வயதடைந்து எழுதப் படிக்கத் தெரியாதவர்களை எவ்வழியிலாயினும் எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகச் செய்வது முதியோர் கல்வியாகும்.]

தற்கால இந்தியாவில், ஆடவர், பெண்டிர் முதலியோர் அனைவரும் எல்லோரும் தத்தமக்குள் எவ்வித வேற்றுமையுமின்றி கல்வியறிவுள்ளவர்களாக இருக்க வேண்டியது அவசிய மென்று எல்லோர் மனத்திலும் தோன்றி வருகிறது. ஆனால், சமீபத்தில் நடந்த தேர்தலில் வாக்குரிமை பெற்ற அநேகருக்கு தங்கள் பெயரைக் கூட எழுதத் தெரியாமல் ஏற்பட்ட சங்கடங்களைப் பற்றி பத்திரிகை வாயிலாக அனைவரும் அறிந்திருப்பீர்கள். வாக்காளர்களுக்கு எழுதப்படிக்குந் திறமை எவ்வளவு அவசியமென்பதைப்பற்றி பல வருடங்களுக்கு முன்னரே தென் இந்திய ஆசிரிய சங்கத்தின் வெள்ளி விழா புத்தகத்தில் ஆரம்பக் கல்வியைப்பற்றி கட்டுரை யொன்றில் காணக்கிடக்கிறது. "பள்ளிக்கு போகக் கூடிய வயதடைந்த எல்லாக் குழந்தைகளும் பள்ளிக்கூடம் ஒழுங்காக வரவேண்டியதற்கு வேண்டிய ஏற்பாடுகள் அதிசீக்கிரத்தில் செய்யப்பட வேண்டும்; அவ்வாறு அவர்களைச் சேர்ப்பதுடன் நில்லாது, எக்காரணத்தினாலுந் தடங்கல் ஏற்படாமல், ஐந்தாம் வகுப்புவரை அவர்கள் படிப்பதற்கு வேண்டிய வழிகளைத் தேடவேண்டும். பள்ளியில் போதிக்கப்

147/44 ★ Chennai-600 008

படுபவை, தன்னுடனாளும் உரிமைபெற்று, பல துறைகளிலும் இன்னும் அபிவிருத்தியடைய வேண்டிய முயற்சிகள் சில பிரஜைகளுக்கு உபயோகமாகக் கூடியனவாய் இருத்தல் வேண்டும்." என்று அதன் ஆசிரியர் எழுதியிருக்கிறார். இதே மனவெழுச்சிதான் கோயம்புத்தூர் கல்வி இலாகாவில் கண்காணிக்கும் உத்தியோகஸ்தர் ஒருவரை பின் வருமாறு சென்ற ஏப்ரல் மாதத்தில் கூறும்படி தூண்டியது:— "ஜனங்களுக்கு கல்வியறிவைப் பரவச் செய்யும் கல்வித்திட்டம் எதுவும், வயதடைந்தும் எழுதப்படிக்கத் தெரியாமல் தயங்கும் பிரஜைகளுக்கு கல்வியறிவைப் புகட்ட வழிதேடாதாயின், அத்திட்டம் பிரயோஜன மற்றதாகும்." ஆங்கில பேராசிரியரான H. G. வெல்ஸ் "கல்வியை யளிப்பதே நாம் வாழும் இப் பூவலகத்தைச் சிறக்கச் செய்வதாகும். சிறுவர்களுக்கு கல்வி வசதிகள் அளிப்பதால் சிறிதும் பிரயோஜனமில்லை." எனக் கூறியிருக்கிறார்.

இந்திய தேசத்தைப் பற்றியவரை, புள்ளி விவரங்களைச் சிறிது ஆராய்வோம். 1935 வருஷம் வெள்ளி விழா புத்தகத்தில் "1931 வருஷ ஜனக்கணக்கில் நூற்றுக்கு 92 பிரஜைகளே எழுதப்படித்தவர்கள். இவற்றில் 3·1% ஜனங்களே நிரந்தரக் கல்வியறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்று கூறவேண்டும். ஆரம்பப் பாடசாலைகளில் வந்து சேருபவர்கள் ஜனத்தொகுதியில் நூற்றுக்கு 57 யாகும். ஆகையால், பள்ளிக்குச் செல்லக் கூடிய பிள்ளைகளில், மூன்றிலொரு பங்கு குழந்தைகளே பள்ளிக்கூடம் ஒழுங்காகப் போய் வருகிறார்கள். மற்றவர்களை கவனிப்பாரு மில்லை; ஒருவித ஏற்பாடும் இதுவரை யாவராலும் செய்யப்படவு மில்லை." சமீப காலத்தில் சில மாதங்களுக்கு முன்புதான் இந்தியா கவர்ண்மெண்டு கல்வித் தலைவர், தம் 1934-35 வருஷத்திய அறிக்கையில், கல்வி பயிலும் வயதுள்ள சிறுவர் சிறுமிகளில் நூற்றுக்கு ஐம்பதின்மரேபள்ளியில் இருக்கிறார்களென்றும், அவ்வாறிருப்பவர்களிலும் நூற்றுக்கு எழுபத்தி நான்கு பிள்ளைகள் சாசுவத கல்வியறிவை யடைவதில்லை யென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதாவது நம் சென்னை மாகாணத்தில் கல்வி கற்கும் வயதுள்ள சிலர்களில் 30% தான் பாடசாலைகளில் இருக்கிறார்கள்; இவர்களில் 31% நிரந்தர பிரயோஜனத்தை அடைகிறார்கள். 'கல்வியறிவு' என்பது நான்காம் வகுப்புவரை ஒரு சிறுவனோ சிறுமியோ படித்து, அதிலேற்படும் அறிவாகும். இதிலிருந்து, நம் நாட்டில், நம் மாகாணத்தில் எவ்வளவு மக்கள் கல்விவாசனை சிறிது கூட இல்லாதவர்களாக இருக்கிறார்களென்பதை ஒரு சிறிது அறியலாம். பொது ஜனங்கள் இப்புள்ளி விவரங்களை அறிந்தால்தான் நம் நாட்டின் கல்வி வறுமையை முற்றிலு முணர்ந்து அதற்கேற்ற பரிகாரந் தேட வழியுண்டாகும்.

பொது ஜனங்களினிடையே கல்வியறிவைப் பரப்பும் பொறுப்பு யாரைச் சார்ந்தது என்பது முக்கியமான பிரச்னையாகும். மாகாண பொருளாதார சபையி(Provincial Economic Council)ன் ஆரம்பக்

JL
T15 M21, N36 PA
N37. 2. 4-5

கல்வி அங்கத்தினர்கள் சென்ற வருஷம் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளனர். “எங்கள் அபிப்ராயத்தில் நம் மாகாணத்திலுள்ள 6½ கோடி குழந்தைகளை பள்ளிக்கு வரச்செய்து, அவர்கள் 12 வயது அடையுமுன் நிரந்தர கல்வியறிவை யடையும்படிச்செய்ய சிறந்தவழி எது என்பதைக் கண்டறிவதே சிக்கலான விடியமாகும்.” எல்லாக் குழந்தைகளையும் கட்டாயப்படுத்தி 5-ம் வகுப்பு தேறும் வரை பள்ளிக்கூடத்தைவிட்டு விலகா திருக்கும்படி செய்வது ஓர் முறையாகும். ஆனால் எல்லாக் குழந்தைகளையும் முதன் முதல் கல்விச் சாலைகளுக்கு வரச்செய்வது எப்படி? அவ்வாறு வரும் மாணவர்களை எவ்விதத்தில் கல்வியறிவை ஊட்டி வளர்ப்பது என்னும் பிரச்னைகள் உண்டாகின்றன.

முதற் கேள்விக்கு மாகாண பொருளாதார சபையாரே பதிலளித்திருக்கின்றனர். “கட்டாய ஆரம்பக் கல்வி முறை பெற்றோர்களை தண்டிப்பது போலாகும். தற்கால பொருளாதார நிலைமையில் ஜனங்களில் பெரும் பான்மையோருக்கு உண்மையாகவே கஷ்டமுண்டாகும்”. என்று அச்சபை கூறியிருக்கிறது. ஆகவே தற்கால நோக்கங்கள் கட்டாயக் கல்வி முறையை விட்டு, பொதுமக்களிடையே, கல்வி உணர்ச்சி எழுப்பி, அதிலிருந்து உண்டாகும் மனோபாவங்களினால் அவர்களாகவே கல்வியறிவை பரவச் செய்வதற்கு வழிதேடச் செய்வது சிறந்த முறை எனக் கூறுவது போலிருக்கின்றது. சென்னை மாகாண மந்திரி வர்க்கத்தினர் ஆரம்பக் கல்வியை எல்லோருக்கும் இலவசமாய் அளிப்பதாகவும், அதற்கேற்ற சாதனங்களும் சௌகரியங்களும் தருவதாகவும், அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர். பொருள் உதவியே அவர்கள் அளிக்கும் தூண்டுகோலாகும். பள்ளிக்கூட நேரம் பிள்ளைகளின் சௌகரியத்திற்கேற்றபடி அமைத்துக் கொள்ளுமாறு மாகாண பொருளாதார சபையார் சிபார்சு செய்திருக்கின்றனர். இம்முறை அனுபவத்தினால் சிலாக்யமானது என்று எனக்கு தோன்றுகிறது. ஓர் மாணவன் ஒரே வகுப்பில் பல வருடம் தங்காமலிருப்பதற்கு வேண்டிய முயற்சி யெடுத்துக்கொள்வது மற்றொரு முறை. ஆனால் இதற்கு கண்காணிப்போரின் தொகை அதிகமாக இருக்கவேண்டும். பொதுநலமும், சேவை எண்ணமும், தியாகபுத்தியும், உள்ள கண்காணிப்போர் நமக்கு அவசியம்.

ஆயினும், பெற்றோர் பிள்ளைகளைத் தவறாமல் பள்ளிக்கூடம் அனுப்ப இவை போதிய வழியல்ல. பள்ளி ஆசிரியரே இவ்விஷயத்தில் பொறுப்பு அதிகமாகவுள்ளவர். ஆசிரியர்களை இதுவரை எல்லோரும் ஏளனம்செய்து வந்தார்கள். இது ஓர் வழியில் சரியென்றாலும், அவர்களது பொறுப்பை யுணர்ந்த மனப்பான்மையுடன் பேசுபவர் வெகு சிலரே. ஆசிரியர்களின் மீதும் குற்றமிருக்கிறது. பிறர் தன்னை கவனிக்கிறார்களென்று அறிந்திருக்கும்போது ஓர் முறை; தன் வேலையை வேறொருவரும் கவனிக்காமலிருக்கும்போது மற்றொரு முறை.

: போதிய போதனா முறை பயிற்சியில்லாத ஆசிரியர் ஓர்புறமிருக்கட்டும். தகுந்த பயிற்சியிருந்தும், தன் தொழிலைச் சரிவரச் செய்யாத ஆரம்ப ஆசிரியரிடம் இரண்டு பெருங்குற்றங்களைக் காணக்கூடும். பள்ளிக்கு வரும் சிறுவர் சிறுமிகளை மனிதனுக்குரிய இயற்கை குணங்களில்லாததுபோல் நடத்தல் (2) ஆசிரியத் தொழிலை உயர்ந்த, சீரிய நோக்கங்களுடன் கருதாமல், கேவலம் தன் வயிற்றுப் பிழைப்பிற்காகவே தான் செய்வதாக எண்ணுதல். முன் சொல்லப்பட்டதற்கு பரிகாரம், ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் பெண் உபாத்தியாயர்களை அமர்த்துவதாகும். பெண் உபாத்தியாயர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றி பலமுறை சொல்லப்பட்டிருக்கிறது. சுய அனுபவத்தில், கீழ் வகுப்புகளில் புருஷர்களைக் காட்டிலும், ஸ்திரீகளே கல்வி கற்பிப்பதில் சிறந்தவர்கள் என்பது ஒவ்வொருவருக்கும் தெரிய வரும். ஏனெனில், பொதுவாக ஸ்திரீகளுக்கு இயற்கையாகவே சிறு குழந்தைகளிடம் ப்ரேமையும், சிரத்தையும் இருப்பதோடு, சிறு குழந்தைகளும் அவர்களை (புருஷர்களைக் காட்டிலும்) அதிகம் நேசிக்கின்றனர். இதனால் சிறு குழந்தைகளுக்கு தவறாமல் கல்விச்சாலை வரவேண்டுமென்னும் எண்ணம் தோன்றுகிறது; பெற்றோர்களும் அனுப்ப சம்மதிக்கின்றனர். இதைத் தவிர, பெண்மணிகளுக்குள்ள இந்த சிரத்தையினால் ஒரே வகுப்பில் ஒரு வருஷத்திற்குமேல் தங்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையும் குறையும்.

பெற்றோர்களின் கூட்டுறவைப் பெறுவதற்காக வேண்டி, பல்வேறு முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. கோயம்புத்தூர் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் பின் வருமாறு கூறுகிறார்:— “பள்ளிக்கூட பாட சம்பந்தமில்லாத விஷயங்களில், கல்விச் சாலைகள், முக்கியமாக ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் என்ன செய்து வருகின்றன வென்பதைப்பற்றி பொது ஜனங்களுக்குச் சிறிதும் தெரியாது. ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் சந்தர்ப்பம் வாய்த்தபோது அவைகளை இவ்விஷயத்தில் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவில்லை. ஆசிரியர்களுக்கு சிரத்தையில்லாமையும், முன்னோக்க எண்ணமில்லா திருத்தலுமே இதற்கு முக்கிய காரணம். ஆரம்பப் பள்ளிக்கூட பாடங்களில் ஐம்புலன்களில், முக்கியமாக கண், கை இவைகளைச் சரிவர பயிற்சி செய்வதற்கு வேண்டிய பாட முறைகள் போதிக்கப்படவேண்டும். ஆதலால் இம்மாதிரி கண்காட்சிகள் வைத்தல் நன்மையை பயக்கும். அவ்வாறு செய்வது பிள்ளைகளுக்கும், உபாத்தியாயர்களுக்கும் ஊக்கத்தையும் ஆர்வத்தையும் அளிக்கும்.” என் அபிப்பிராயத்தில் இம்மாதிரி கண் காக்ஷிகளுக்கு பிள்ளைகளின் பெற்றோர்கள் அவசியம் அழைக்கப்படவேண்டும். கண் காக்ஷியிலுள்ள ஒவ்வொரு பொருளும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டும். இதிலிருந்து புதுப்பிள்ளைகளின் சம்பந்தம் ஏற்படக்கூடும். நான் பார்த்த அளவில் பெண்கள் பள்ளிக்கூடங்களும், ஆசிரியைகள் இருக்கும் பள்ளிக்கூடங்களுமே சிறப்

பாக கண்காக்ஷிகளை நடத்தி யிருக்கின்றனர். இவைகளை ஏன் ஆண் பள்ளிக்கூடங்கள் பின்பற்றக்கூடாது?

ஆரம்ப பாடசாலைகள் கிராம புனருத்தாரணத்திற்காக உபயோகப் படுத்துவது பள்ளிக்கூடத்திற்கு அதிகப் பிள்ளைகளை சேர்ப்பதற்கு வேறு ஒரு முறையாகும். இவ்விஷயத்தைப் பற்றி சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்பு பின் வருமாறு குறிப்பிடப் பட்டிருக்கிறது.

"பள்ளிக்கூடங்களை பொது ஜனங்கள் விரும்பும்படியாக செய்வதற்கு சரியான முறை, பள்ளிக் கூடங்களில் போதிக்கப்படும் பாடங்கள் கிராமங்களுக்கு வேண்டிய வசதிகளுக்கு சம்பந்த முள்ளதாயிருக்க வேண்டும். ஆனால் குடியானவனுக்கும், சீர்த்திருத்தம் செய்பவனுக்கும் மன ஒற்றுமை இல்லா விட்டால் பிரயோஜன மிராது. சீர்த்திருத்தக்காரனுக்கு புது முறைப் பள்ளிக் கூடங்களில் உழவு, நெய்தல் முதலிய பிரயோஜன முள்ள பாடங்களை போதிக்க வேண்டும் என்னும் எண்ண மிருக்கிறது. கிராம வாழ்க்கையி லிருப்பவன் தன் குழந்தைகள் எழுதப் படிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற எண்ணத்துடன் அனுப்புகிறான். பள்ளிக்கூட ஆசிரியருக்கு கிருஷியைப் பற்றியோ அல்லது வேறு கிராமத் தொழிலைப் பற்றியோ தன்னைக் காட்டிலும் குறைவாகத் தான் தெரியும் என்கிற உண்மையை அவன் அறிந்திருக்கிறான். அது சரியான அபிப்பிராயமே."

வட ஆற்காடு ஜில்லாவில் இவ்விஷயத்தைப்பற்றி சீர்திருத்தக்காரருக்கும், கிராமத்தாருக்கும் மன ஒற்றுமை இருக்கிறது என்பது அறிய நாம் சந்தோஷப் படுவோம். காட்பாடி ஆரம்ப பாடசாலையில் சாதாரண பாட திட்டங்களுடன் பண்ணைத் தொழிலில் நவீன வழிகளை கையாண்டு வெற்றி அடைந்திருக்கின்றனர். இதைப்பற்றி பஞ்சாப் கல்விப் பத்திரிகையில் கூட குறிப்பிடப் பட்டிருக்கிறது.

நான் மறுபடி Coimbatore Divisional Inspector சொன்ன முறையை குறிக்க விரும்புகிறேன். பிள்ளைகளை பள்ளிக்கூடம் அனுப்பிய பிறகு அவர்கள் நீண்ட காலம் பள்ளிக் கூடத்திலேயே தங்கும்படி பெற்றோர்களுக்கு ஆசை தூண்டக் கூடிய பாட திட்டங்கள் எவை என்று ஆலோசிப்பது அவசியமாகும். ஏனெனில் பள்ளிக்கூடத்தை விட்டுச் செல்லும் ஒவ்வொரு மாணவனும் தொழில் முறையை பின்பற்றி தன் ஜீவனத்தைத் தேட விரும்புகிறான். இப்பாட திட்டங்கள் எவை என்று குறிக்கப்பட்டிருந்தால் நமக்கு பிரயோஜனம் இருந்திருக்கும்.

பள்ளிக்கூடம் வந்த பிள்ளைகளை என்ன செய்வது என்பது மற்றொரு பெரிய பிரச்னையாகும். Punjab Educational Council இவ்விஷயமாகப் பின் வருமாறு கூறியிருக்கிறது. "போதுமான பள்ளிக்கூடங்களும், போதுமான போதனா முறை பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களும் இல்லாதவரை, இது அதிகச் செலவான விஷயமா யிருப்பதோடு, கை கூடாத காரியமாகும்." என் அபிப்ராயத்தில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்களில் நடக்கும் முறையைக் கையாளுவதே சிறந்த தாகும். சரியான முறையில் அமைக்கப்பட்ட பாட திட்டங்கள் சிறந்த ஆசிரியர்களால் காலை மூன்று மணி நேரம் ஒவ்வோர் வகுப்பு மாணவர்களுக்கும் போதிக்கப்பட வேண்டும். மாலை வேளைகளில் அதே பாட திட்டம் அதே ஆசிரியர்களால் வேறொரு மாணவக் கூட்டத்திற்கு போதிக்கப் பட வேண்டாம். இதனால் ஆசிரியர்களுக்கும் சிரமம் இருக்காது. பலனும் அதிகமளிக்கும். சாதனங்கள் நமக்கு அதிகமாக கிடைக்கும் வரை இம்முறையைப் பின் பற்றலாம்.

கட்டாய ஆரம்பக்கல்வி வெற்றி அடையவேண்டுமானால் பலவேறு பிள்ளைகளுக்கும் உபயோகமான தாயிருக்கவேண்டும். அதாவது கல்வி இலாகா அமைப்பு, மேற்பார்வை, பாடதிட்டங்கள் முழுவதும் மாறுபட வேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கும் நிபுணர்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றனர். "கல்வித்துறையில் பயிற்சி பெற்றவர்கள் ஒவ்வொரு குழந்தையின் மனோபாவத்தை முற்றிலும் உணர்ந்தாலொழிய சரியானபடி கல்வி புகட்டமுடியாது. நூதன பாட அமைப்பு, நூதன போதனா முறைகள், நூதன சாதனங்கள் ஒவ்வொரு குழந்தைக்கும் வேண்டும்." இவ்வுணர்ச்சி நம் நாட்டிற்கு எந்நாள் வருமோ.

நூதன கல்வி முறைகளை அநுஷ்டித்து பள்ளிக்கு வரும் மாணவர்களின் தொகையை அதிகமாவதினால் ஆரம்பக்கல்வியின் நோக்கமும், முடிவும் என்ன என்றுதாம் சிந்தனை செய்வது அவசிய மாகிறது. சிகாகோ சர்வகலாசாலையைச் சேர்ந்த அறிஞர்கள், ஆரம்பக்கல்வியின் நோக்கம் ஐந்து என்று வரையறுத் திருக்கின்றனர். 1. குழந்தை தனக்கு இயற்கையாக உள்ள சக்தியை அபிவிருத்தி செய்து அறிதல். 2. பள்ளிக்குவரும் மாணவனை ஞானமுள்ள, அறிவுள்ள பிரஜையாக்குதல். 3. அச்சிறுவனை உலக சம்பந்தமான விஷயங்களை அறியச் செய்து கல்வியில் சிரத்தை உண்டாகும்படி செய்தல். 4. அவனது ஒய்வு நேரங்களை உபயோக முள்ள வழிகளில் செலவழிக்க அறியச் செய்தல். 5. தன்தேச நலத்திலும், தேசப்பயிற்சியிலும், ஊக்கம் உண்டாக்கச் செய்தல். இந் நோக்கங்கள் எந்நாட்டினரும், எக்காலத்திலும் ஆரம்பக் கல்வியின் நோக்கங்களாக எடுத்துக் கொள்ளக் கூடியன.

இந்தியாவை பொருத்த மட்டில் ஆரம்பக்கல்வியின் நோக்கம் ஒவ்வொரு இந்தியச் சிறுவனும், சிறுமியும் பன்னிரண்டு வயதை அடைவதற்குமுன் நிரந்தரக்கல்வி அறிவு உள்ளவராகச் செய்தல். அநேக நிபுணர்கள் ஆரம்பப் பள்ளிக் கூடங்களில் சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்து வாசிக்கலா மென்றும் சில விளையாட்டுக்களிலும், கை வேலைகள் மட்டிலும் வித்யாசமிருந்தால் போதுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர்.

ஆரம்பக் கல்வி முடிந்தவுடன் அப்பள்ளியில் படித்த மாணவர்கள் ஓர் Middle School அல்லது உயர்தர ஆரம்பப் பாடசாலை சேருவதற்கு போதுமான அறிவுள்ளவர்களாய் இருக்கவேண்டும். இவ்விரு விதமான பள்ளிக்கூடங்களும் பலவிதமான பாடங்களை கற்பிப்பது உசிதம். ஆயினும் Middle Schoolகளில் முதல் பாரம் வரையில் ஆங்கிலம் தேவையில்லை. புத்திசாலிச் சிறுவர்கள் மட்டிலும் மூன்று அல்லது நான்கு வருஷங்களில் ஆங்கிலப் பயிற்சி செய்துகொள்ளலாம்.

நற்பழக்கங்களையும், திறனோடு கூடிய வேலைகளையும், கற்பிக்கவேண்டும். ஓய்வு நேரங்களை வீணாக்காமல், சிறந்த வழியில் தனக்கும் பிறருக்கும், பிரயோஜனமாகும்படி செலவழிக்க அவனை பயிற்சிக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் அவன் பிற்கால வாழ்க்கையில் ஜன சமூகத்தில் சிறந்தவனாகின்றான்.

தற்கால பாட திட்டங்களின் குறைகள் அநேகம். பாட திட்டங்கள் உபயோகமானதல்ல. முதல் ஐந்து வகுப்புகளிலும் ஆங்கிலப் பயிற்சி இருத்தல். சர்வ கலாசாலையின் அதிகாரம் பரவியிருத்தல். இவ்வாறு இருத்தல் கூடாது என்பதற்கு அத்தாக்ஷிகள் அநேகம் இருக்கின்றன. 1918 முதல் 1925 வரை $6\frac{1}{2}$—$8\frac{1}{2}$ லக்ஷம் மாணாக்கர்கள் இம்மாகாணத்தில் முதல் வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள். அவ்வாறு சேர்ந்தவர்கள் ஹைஸ்கூல் அல்லது கலாசாலைப் படிப்பை முடிக்கும் எண்ணத்துடன் படிப்பை ஆரம்பித்தார்கள் என்று வைத்துக்கொண்டு 1934—1935 வருஷத்திய புள்ளி விவரங்களை கவனிப்போம். அவ்வருஷம் S. S. L. C. பரிக்ஷைக்கு தயாரானவர்கள் 1919 ல் இருந்த மாணவர்களின் எண்ணிக்கையில் 100 க்கு 3 வீதம் ஆகிறது. இதில் மூவருக்கும் ஒருவரே கலாசாலை சேர தேர்ச்சி பெற்றனர். Senior B. A. வகுப்பில் 100 க்கு $\frac{1}{3}$ இருந்தார்கள். 1924 ம் வருஷத்திய எண்ணிக்கையில் 100 க்கு இருவரே S. S. L. C. பரிக்ஷைக்கு தயாரானார்கள். அதாவது முதல் வகுப்பில் சேரும் ஒவ்வொரு 1000 மாணாக்கர்களுக்கும் ஒருவனே S. S. L. C. தேர்ச்சி பெறுகிறான். 4000 ல் ஒருவனே B. A. வரையில் படிக்கிறான். அமெரிக்க புள்ளி விவரங்களை ஒத்திட்டுப் பார்த்தால் முதல் வகுப்பில் சேரும் 1000 மாணாக்கர்களுக்கு 260 High School படிப்பையும் 50 பேர் கலாசாலை படிப்பையும் வெற்றியுடன் முடிக்கிறார்கள்.

இவைகளிலிருந்து சமீபகாலத்தில் ஆரம்ப உயர்தர கல்வி திட்டங்களை சர்வ கலாசாலை பாட திட்டங்களினின்றும் நீக்க முயற்சி செய்ய ஆரம்பித்தது சரியான முறை. அவை வருங்காலத்தில் கூடிய சீக்கிரத்திலேயே மாறுதல்கள் வரக்கூடும். எம்முறைகளில் மாறுதல்கள் வரக்கூடுமென்று குறிக்கின்றேன். பாட திட்டங்களில் மதபோதனையிருக்க வேண்டுமென்றும் உணர்ச்சியிருந்து வருகிறது. இவ்வாறு இருப்பது ஆச்சரியகரமல்ல. இவ்விஷயத்தைப்பற்றி சர்க்காரின் தெளிவான அபிப்ராயம் தெரியவில்லை. இந்தியர்களுக்கே, மதபோதனை செய்வதா அல்லது நீதியை விளைவிக்கும் கதைகளை பிள்ளைகளுக்கு சொல்லுவதா என்பதைப்பற்றி முடிவான அபிப்ராயம் வரவில்லை. இதைப்பற்றி அதிகம் சொல்லுவது சரியல்ல.

கணித போதனா முறை மாறிக்கொண்டே வருகிறது. கணிதத்தின் அடிப்படையான கொள்கைகளை சரிவர ஆரம்பப் பாடசாலையிலுள்ள மாணவர்கள் அறிய வேண்டியது அவசியம். தினப்படி சுலபமான கணக்குகளின் மூலமாக எல்லா கணித முறைகளையும் போதிப்பதே சரியான முறையாகும். பிள்ளைகளின் பயிற்சி அடிக்கடி பரிசோதிக்கப்பட வேண்டும். நூற்றுக்கு நூறு கணக்குகள் சரியாகப் போடப்பட வேண்டும். சிறு பிழைகளிருந்தாலும் கூட திருத்தப்படவேண்டும். ஆனால் கணித போதனா முறையில் பிரசார சம்பந்தமான கணக்குகள் பிள்ளைகளுக்கு கொடுக்கக் கூடாது.

பூகோளம், சரித்திரம், தேச ஆட்சி முறை முதலிய பாடங்கள் கற்பிக்கப்படும்போது மூன்று நோக்கங்கள் நம் மனதில் இருக்கவேண்டும் சிறு குழந்தையுங்கூட அறிந்து கொள்ளும்படி, அவனிருக்கும் இடத்தைப் பற்றியும், அவன் அறிந்துகொள்ளக் கூடிய விஷயங்களையும், போதித்து அதிலிருந்து வெளி விஷயங்களைப்பற்றியும், உலக வியவகாரங்களைப்பற்றியும் காலம் கிடைத்த மட்டில் கற்பித்தல் வேண்டும். இரண்டாவதாக இப்பாடங்கள் கதைகள் மூலம் பிள்ளைகளுக்கு கற்பித்தல் வேண்டும். கடைசியாக மாணவன் தனக்கும் தன்னைச் சற்றி உள்ளவர்களுக்குமுள்ள சம்பந்தத்தை சரிவர உணரும்படியாக இப்பாடங்கள் போதிக்கப்பட வேண்டும். இந்நோக்கங்களை ஞாபகத்தில் வைத்து ஒவ்வொரு ஆசிரியரும், சிறந்த புத்தகங்களைப் படித்து சிறுவர்கள் ரஸித்து ஆனந்தமடையக் கூடிய கதைகள் மூலம் இப்பாடங்களை போதிப்பாராயின் இப்பாடங்களை போதிப்பதினால் உண்டாகும் உபயோகம் அதிகமாகும் என்பதற்கு சிறிதும் ஐயமில்லை.

பிறகு கை வேலைகளைப்பற்றி ஆராய்வோம். இயற்கைப் பொருட்பாடம், சுகாதாரம், விளையாட்டுகள், தேகப்பயிற்சி, பலவித கை வேலைகள் இதனுள் அடங்கும். இயற்கை பொருட்பாடமும் சுகாதாரமும் தோட்ட வேலை செய்வதினாலேயும் உல்லாச வெளி ப்ரயாணத்தினாலேயும் அறிய வேண்டியவை. ஆரம்ப பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு இவைகள் நறுமணம் கமழும் புஷ்பத் தோட்டங்களில் இளங்காற்று மெல்லென வீச, இவைகளைச் சொல்லிக்கொடுத்தால் பிள்ளைகள் சந்தோஷத்துடன் படிப்பார்கள். சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடம் செல்வதில் ஆவலும் பிரியமும் இருக்கும். கை வேலையை பிழைப்பிற்கென கற்றுக்கொடுத்தல் கூடாது. கை வேலையினால் மனதிற்கு திருப்தியும், சந்தோஷமும் உண்டாக்கக்கூடிய வேலைகளே கற்பிக்கப்படவேண்டும். பிற்காலத்தில் இதன் பயனாக ஓய்வு

நேரங்களை கழிக்க வழி உண்டாகுமானால் இக்கல்வியை கற்றதன் பயன் முற்றுப்பெறும்.

தேகப் பயிற்சியைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதில்லை. கூட்டு விளையாட்டுகளே எல்லா வகைகளிலும் சிறுவர்களுக்காகட்டும், பெரியவர்களுக்காகட்டும் சிறந்தது. இவ்விஷயத்தில் சைதாப்பேட்டையிலுள்ள இந்திய கிருஸ்தவ வாலிப சங்கத்தார் செய்துவரும் சேவை போற்றத்தக்கது. இவர்களால் பயிற்சி செய்விக்கப்படும் வருங்கால Drill Master பிள்ளைகளை சந்தோஷத்துடன் வளரச் செய்வார் என்று நிரமாய்க் கூறலாம்.

கடைசியாகத் தாய்ப் பாஷையைப்பற்றிக் கூற விரும்புகின்றேன். தாய்ப் பாஷையின் அபிவிருத்தி மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தாய்ப் பாஷையின் மூலமாகவே பொது ஜனங்கள் தங்கள் அறிவை விசாலப்படுத்திக் கொள்ளுகிறார்கள். ஆரம்பக் கல்வியின் அஸ்திவாரமாகும் தாய்ப்பாஷை. ஆயினும், தற்காலம் தமிழ் கற்பிக்கும் முறை கேவலமான நிலையிலிருக்கிறது. படிக்காததிலிருந்து வரும் முறை—குழந்தைகளின் மனோபாவத்திற்கு நேர்மாறானது. எழுத்துக்களை முதல் வகுப்பில் சிறிதும் பயன்படாத வார்த்தைகளை போதித்தல், வார்த்தைகளை அடிக்கடி உபயோகிக்க மறந்துவிடுதல்; வாக்கியங்கள் வெகு சிலவேயிருத்தல்; ஓர் வார்த்தையை நன்றாக அறிந்திருந்தாலும் அதைப்படிக்கும் ஒவ்வொரு சமயத்திலும் எழுத்தைக் கூட்டிப் படிக்கச் செய்தல் சில குறைகளாகும். இதனால் காலமும், சக்தியும் வீணாகின்றனவே தவிர வேறு பிரயோஜனமில்லை.

தாய்ப் பாஷை கற்பிக்க வேண்டிய புது முறையில் முதல் காரியமாக சாதாரண வழக்கத்தில் இருந்துவரும் 200 வார்த்தைகள் பொறுக்கப்படவேண்டும். இவை குழந்தையின் தினசரி வாழ்க்கையில் வரக்கூடியவையாக யிருக்கவேண்டும். இதை அடிப்படையாகக் கொண்டு முழுவதும் வாக்கியங்களாகவே உள்ள புத்தகங்கள் எழுதப்படவேண்டும். வாக்கியங்களிலுள்ள வார்த்தைகளும், புது முறையிலுள்ள வார்த்தைகளும் அடிக்கடி பிள்ளைகளுக்கு கற்பிக்கப்பட்டு எந்த வார்த்தையையும், எந்த இடத்திலும், எந்த சந்தர்ப்பத்திலும் குழந்தை அறியும்படிச் செய்ய வேண்டும். இதன் பிறகு பாஷையின் எழுத்துக்கள் எவ்வரிசையில் இருக்கின்றன என்பதை பிள்ளைகள் அறிதல் வேண்டும். இம்முறையைப் பின்பற்றுவதினால் மாணாக்கன் தனிப்பட்ட வார்த்தைகளை அறியும் வழக்கத்தைவிட்டு வாக்கியங்களை அறிகிறான். அப்பொழுதே உணர்ச்சியுடன் படிப்பதற்கு சமயமுண்டாகிறது. இம்முறையை அநுஷ்டிக்க முதல் வகுப்பின் எவ்வளவு வார்த்தைகளை, எத்தனை தடவைகள் முதல் வகுப்பு புத்தகங்கள் உபயோகப்படுத்தப்பட்டு இருக்கின்றன என்பதற்காக மூன்றுவித முறையில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வார்த்தைகளின் எண்ணிக்கைகள்

	டேனியல் Daniel	ஸாவூர் Savur	லாபேக் Laubach
1. முறை உபயோகிக்கப்பட்ட வார்த்தைகள்	399	89	251
2. ,, ,,	78	57	45
3. ,, ,,	29	26	25
4. ,, ,,	11	10	11
5. ,, ,,	11	9	7
6. ,, ,,	9	5	6
7. ,, ,,	3	6	6
8. ,, ,,	3	5	2
9. ,, ,,	3	2	1
10. ,, ,,	1	4	1
10. முறைக்குமேல் ,,	1	13	3
மொத்தம்	548	226	358

இவைகளிலிருந்து Daniel முறை சிரமசாத்தியமானதென்றும் Savur முறை சரியானதென்றும் தெரிகிறது. Savur, Laubach முறை இரண்டும் வாக்கியங்களில் ஆரம்பிக்கின்றன. ஆகவே படிக்கும் சக்தி சீக்கிரம் வருகிறது. Laubach முறை படிப்பில்லாத முதியோர்களுக்கு உபயோகமானது. எட்டு வாரங்களில் படிக்கும் சக்தி இம்முறையினால் உண்டாகிறது.

ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் ஏற்படும் கல்வி யறிவு கிராமத்திலுள்ள படிப்பில்லாத வயதானவர்களுக்கும் பரவ வேண்டுமாயின் தொன்றுதொட்டு பழமையாக மூட நம்பிக்கையின் உபயோகத்திலிருக்கும் புத்தகங்கள் மறைந்து புது முறையில் எழுதப்பட்டுள்ள புத்தகங்கள் உபயோகத்திற்கு வரவேண்டும். அவ்வாறு செய்வது சிரமமாயிருந்தால் Laubach முறை சிறுவர்களுக்கு கற்பிக்கப்பட்டு இவர்கள் முதியோர்களுக்கு சொல்லித் தரலாம். இம்முறை இந்திய மனப் பாங்கிற்கு முரணாயிருக்கலாம். ஆனால் இதில் இவ்வாறு செய்வதில் பாதகம் ஒன்றுமில்லை.

தகுந்த புத்தகங்கள் வாசிப்பதற்கு இல்லாமலிருந்தால் கல்வி கற்றவர்கள் தாங்கள் அறிந்ததை மறந்துவிடக் கூடும். சரியான புத்தகங்கள்

இல்லாமலிருப்பதே படித்தும் அநேகர் அதன் பயனை அடையாமலிருப்பதற்கு காரணமாகும். கிருஸ்தவ இலக்கிய சங்கத்தார் இக்குறையை தீர்க்க முன் வந்திருக்கின்றனர். கிராமத்தாரின் தினசரி வாழ்க்கையில் வழங்கும் வார்த்தைகளை பொறுக்கி எடுத்து அதை அடிப்படையாகக் கொண்ட புத்தகங்களை எழுத முயன்று வருகிறார்கள். ஏற்கனவே இவர்கள் பொறுக்கி எடுத்திருக்கும் வார்த்தைகள் பத்திரிகைகளில் உபயோகப்படுத்தி அதன் மூலம் கல்வி அறிவை பரவச் செய்கிறார்கள். கிராமத்திற்கென சிறு புத்தகாலயங்கள் சிறிதே எழுத்து வாசனை உள்ளவர்களும், படிக்கும்படியான புத்தகங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன. விலையும் ஸரஸம். இம்முறையை ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பின்பற்றக் கூடுமானால் வெகு சீக்கிரத்திலேயே கல்வியறிவு அனைவருக்கும் பரவும். கிராம பள்ளிக்கூடங்களுக்கும் இம்முறையை பரவச் செய்யலாம்.

தற்கால இந்தியாவில் அநேக பெரிய மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. தகுந்த ஆற்றலும், அறிவும், ஊக்கமும் உள்ள தலைவர்கள் இருக்கின்றனர். அவர்கள் கல்வி பரவச் செய்யும் விஷயத்தில் சிரத்தை எடுத்து உண்மையான ஊக்கத்துடன் உழைத்தார்களானால் அதன் பயனை நாம் அடையலாம். ஆயினும் இவ்விஷயத்தில் முதற் பொறுப்பு ஆசிரியர்களை சார்ந்ததாகும். அவர்களே இவ்விஷயத்தை ஏற்று கல்வி அறிவில்லாமை என்னும் அரக்கனை ஒழிக்கவேண்டும்.

குழந்தைகளின் கை வேலை

கடுதாசுப் பாண்டங்கள்



டம்ளர், கோப்பை, தட்டு இவைகளைக் கடுதாசினால் எப்படிச் செய்யலாம் என்று இப்பொழுது சொல்லித் தருகிறேன்.

பழைய தினசரிப் பத்திரிகை கொஞ்சம் எடுத்துக் கொண்டு அதைத் துண்டு துண்டாகக் கிழித்துக் கொள். ஒவ்வாரு துண்டு ஒரு அங்குலம் நீளம் ½ அங்குலம் அகலம் இருக்கட்டும். அத் துண்டுகளை ஒரு நாள் முழுமையும் தண்ணீரில் ஊறப் போடு.

அகல வாயுள்ள பாத்திரம் ஒன்று எடுத்துக் கொள். மேலே ஊறப்பட்ட கடுதாசுத் துண்டுகளைப் பரப்பக்கூடியதாய் இருக்க வேண்டும். இவை காய்ந்தபிறகு எடுக்கக் கூடியதாயுமிருக்க வேண்டும். இக்கடுதாசுத் துண்டுகளை எடுத்துக்கொண்ட பாண்டத்தின் உட்புறமாக அல்லது வெளிப்புறமாக ஒட்டலாம். அதன் பொருட்டு குறுகினவாயுள்ள கழுத்துகளின் பாண்டங்கள் உதவாது.

இம்மாதிரி ஒரு பாண்டம் எடுத்துக் கொள். அதன்மீது முழுமையும் கொஞ்சம் எண்ணெய் தடவு. ஊறப்பட்ட துண்டுகளை எடுத்துக் கொண்டு நீரைப் பிழிந்து விடு. பாண்டத்தின் மேல் இத்துண்டுகளை ஒன்று ஒன்றாகப் பரப்பு. பாண்டத்தின் வரம்பு தாண்டி இத்துண்டுகள் வரக் கட்டாது. இம்மாதிரி ஒரு தடவை கடுதாசு ஒட்டின பிறகு அதன்மீது கொஞ்சம் பசையை மெல்லியதாய்த் தடவு. அழுத்தித் தடவாதே. மறுபடி துண்டுகளை ஒன்றொன்றாய் வை. பூராவாக கடிதாசுத் துண்டு வைத்ததும் மறுபடியும் ஒரு தடவை பசையைப் பூசு. இம்மாதிரி பல தடவை கடுதாசுத் துண்டு வைத்துப் பசைபூசி வேண்டிய கனமானதும் இதைக் காயவை. இது நிழலிலேயே காய வேண்டும்.

காய்ந்த பிறகு கடுதாசுப் பாத்திரத்தை வெளியே எடு. அதன் ஓரத்தைச் சுத்தமாய் கத்தரி. இந்தக் கடுதாசுப் பாத்திரத்திற்கு வர்ண எண்ணெய் பூசு. அப்பொழுது பாத்திரம் பளபளப்பாய் இருக்கும். வெயிலும் மழையும்கூட தாங்கும். வர்ணம் பூசின பிறகு படம் 7, a b cல் காட்டியபடி தாரிகையினால் சித்திரம் போடு.

படத்தில் இலை, பூச் சித்திரங்கள் இருக்கின்றதைப் பார். இம்மாதிரி பல கடுதாசுப் பாண்டங்கள் செய்து வர்ணம் கொடுத்து பூ வேலை செய்வாயாகில் நவராத்திரிக் கொலுவிற்கு இவற்றை வைத்து சந்தோஷப்படு. பிறரும் உன் வேலையைப் பார்த்து சந்தோஷப் படுவார்கள். பழைய கடுதாசும் விதம் விதமான அழகுப் பாத்திரம் செய்ய உபயோகப்படுகிறதல்லவா.

K. சுவர்ணவல்லி

(*Allrights Reserved*)

பத்திராதிபர் குறிப்புக்கள்

நவீன கல்வி முறைச் சங்கம் :—

சென்னையில் நவீன கல்வி முறைச் சங்கம் ஒன்று சென்றமாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இது லண்டனிலுள்ள நவீன கல்வி முறைச் சங்கத்துடன் இணைக்கப்படுமாம். இச்சங்கத்தின் முக்கிய கொள்கை பாலர்களுக்கு, அவரவர்கள் தம் இயற்கைக்குத் தகுந்தாற் போல் கல்விப் பயிற்சி அளித்து, அவர்களின் பல நற்குணங்களையும் வளரச் செய்வதே. எப்படி ஒரு தோட்டக்காரன் செடிகள் செழிமையாக வளர என்னென்ன செய்யவேண்டுமென்று கவனித்துச் செடிகளை நன்கு வளரச் செய்கின்றானோ அதுபோலவே ஆசிரியர்களும் ஒவ்வொரு மாணவனையும் கவனித்து, அவனது கஷ்டங்களையும் துன்பங்களையும் அறிந்து, அவனுக்கு உற்சாகமும் ஊக்கமும் அளித்து, அவனது நல்ல குணங்கள் சிர்தூக்கி வளருமாறு போதித்து வருதல்வேண்டும். இது விஷயங்களை ஆராய்ச்சி செய்துவருவது இப் புதிய சங்கத்தின் நோக்கம். இச்சங்கத்தில் எல்லா ஆசிரியர்களும் சேரலாம். எல்லாரும் சேர்ந்து, அவரவர்களுடைய அனுபவங்களைத் தெரிக்தால்தான் நவீன முறைகளை அனுபவத்தில் கொண்டுவர முடியும்.

இச்சங்கத்தின் சார்பாக ஒரு வரவேற்புக்கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. இக் கமிட்டிக்குக் கனம் Dr. P. சுப்பராயன் அவர்கள் தலைமை வகிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார். நாளது அக்டோபர்மீ 28உ யன்று லண்டன் நவீன முறை கல்விச் சங்கத்தின் அங்கத்தினர்களாகிய ரெக்டர் லாரின் ஜில்லியாகஸ், பீயர் போவே துரை, சால்டர் டேவீஸ் துரை யவர்களும் சென்னைக்கு விஜயம் செய்வதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. இப்பெரியார்களின் வரவேற்புக்காகவே, இவ்வரவேற்புக் கமிட்டி கூட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் சென்னையில் 5 தினங்கள் தங்குவார்கள். அவ்வமயத்தில் நவீன கல்வி முறைகளைப் பற்றியும் புதுமுறைக் கல்வி ஆராய்ச்சி விஷயங்களைப் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள். தவிர அக்டோபர் 30உ யன்று, ஒரு நவீன முறைக் கல்வி மகாநாடும் நடைபெறும். இம் மகாநாட்டுக்கு, ஆசிரியர்கள் அனைவரும் விஜயம் செய்வார்கள் என்று கருதப்படுகிறது. இம் மகாநாட்டுக்கு வர விரும்புவோர்களும், வரவேற்புக் கமிட்டியில் சேர விரும்புவோர்களும் சென்னைக் கிரிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் குருவில்லா ஜேகப் அவர்களுக்கு எழுதி மற்ற விவரங்கள் தெரிந்துகொள்ளலாம்.

147644
சென்னை-600 008.

7-வது தென் இந்தியக் கல்வி வாரம்.

சென்ற ஆறு வருஷங்களாக நடத்தி வந்ததுபோல் இவ்வருஷமும் தென் இந்தியக் கல்வி வாரம் கொண்டாடுவதென்று தீர்மானித்து, மாகாணக் கல்வி வாரக் கமிட்டி ஒன்று கூட்டப்பட்டிருக்கிறது. இக்கமிட்டி பல கல்விச் சங்கங்களின் ஆதரவில் இணைக்கப்பட்டிருக்கிறது. இவ்வருஷம் இக்கொண்டாட்ட காலத்தில் ஆசிரியர்களும், ஜன சமூகத்தாரும், ஆலோசிக்கும் விஷயம், கல்வியும் இந்தியாவில் மாறும் என்பதாம். புதிய அரசாங்கத் திட்டத்தின்படி, மாகாணங்களுக்கு ஒருவாறாகச் சுதந்திரம் கிடைத்திருக்கிறது நமது நேயர்களுக்குத் தெரிந்ததே. இச்சுதந்திரத்தை நாம் சரிவர நிர்வஹித்து, முன்னேற்றமடைய வேண்டுமானால், கல்வியறியாமை யென்பதை அறவே ஒழிக்கவேண்டும். நமது பாலர்கள் அனைவருக்கும் கல்வி புகட்டுவதுமல்லாமல், கல்வி யறிவில்லாத வயதானவர்களையும் கல்வியறிவாளர்களாக்கவேண்டும். சுய ஆக்ஷி பயன்பட வேண்டுமானால் வாக்காளர்களுக்கு ராஜீய விஷயங்களைப்பற்றிச் சிந்திக்கும் சக்தி வேண்டும். தங்களது வாக்குரிமையைச் செவ்வனே செலுத்தும் சக்தியிருந்தால்தான் சுய ஆக்ஷி பயன்படும். கல்வியறியாமையை ஒழிக்க ஆசிரியர்களே முன் வரவேண்டும். இக்கல்வி வாரக்கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கம், கல்வியின் பயனை ஜனங்களுக்கு எடுத்துரைப்பதும், ஜனசமூகங்களில் கல்வியறியாமை ஒழிக்கவேண்டு மென்னும் கிளர்ச்சி உண்டுபண்ணுவது ஒன்றாம். இரண்டாவதாகத் தற்கால பள்ளிக்கூடங்கள் செய்துவரும் வேலையையும், பள்ளிக்கூடங்களின் குறைகளையும் பொதுஜனங்களுக்கு எடுத்துரைப்பதுமாம்.

மத்திய கல்விவாரக் கமிட்டியார் கல்விவாரத்தின் நோக்கத்தையும், கல்விவாரம் கொண்டாடும் முறைகளைப்பற்றியும் ஒரு சிறு புஸ்தகம் தயாரித்திருக்கிறார். கல்வி வாரம் கொண்டாட விரும்புவோர், கடிதம் எழுதினால், ஒரு பிரதி அனுப்பப்படும். தவிர, மத்திய கல்வி வாரக் கமிட்டியார் சுவரில் ஒட்டும் கல்வி வார நோட்டீஸ்களும், கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பெற்றோர்களுக்கு விண்ணப்பமும் தயாரித்துவருகிறார்கள். ரூபாய் **3** அனுப்பினால் இவைகளெல்லாம் அனுப்பப்படும்.

கல்வி அபிவிருத்தி மிகவும் முக்கியமான தென்பது எல்லாருக்கும் தெரிந்ததே. கல்வி அபிவிருத்திக்காகத் தொண்டுபுரிவது ஆசிரியரின் முக்கிய கடமை. நம்மாகாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் இக்கல்வி வாரக் கொண்டாட்டம் கொண்டாடப்படும் என்றே நம்புகிறோம்.

அடுத்த இதழ்.

அக்டோபர் மாதத்திய பாலர் கல்வி, ஒரு விசேஷப் பிரதியாக பிரசுரிக்கப்படும். இதில் கல்வி வார விஷயங்களும், நூதன கல்வி பற்றியும் பெரியார்கள் எழுதிய பல கட்டுரைகளைக் காணலாம்.

TL
5M21, N36PA N37.2.4-5

Wanted publishers to purchase the following manuscripts written by C. S. Ramaswamy Iyer, Retired Teacher and author of Child's History of India, Heroines of Ind, etc.

English Conversation Book I		for Class IV
do. do. Book II		do. V
Arithmetic for Beginners	... ...	in Tamil
Domestic Hygiene	... ...	in Tamil
Stories from Indian History	... ...	for Class V
Tamil Primer for Beginners	... ...	...

For terms, please write for outright purchase of the Copyright of the above

to The Editor of this Magazine or to:

C. S. RAMASWAMY IYER *(Retired Teacher)*

2/12-A, Alangatha Pillai Street : : Triplicane, Madras.

A NEW SERIES OF ENGLISH READERS FOR SCHOOLS IN INDIA

The Coronation English Readers

Edited by Prof. J. C. ROLLO, M.A.

Principal, Maharaja's College, Mysore

Primer, Part I	(3rd Class)	Annas 3
Primer, Part II	(4th Class)	Annas 3
Primer, Parts I & II		Annas 6
Book I	(5th Class)	Annas 6
Book II	(1st Form)	Annas 8

Books III & IV will be ready shortly.

The above series of English Readers are the result of thorough study of the present day needs of pupils learning English at the early stages. The books are well got up with many illustrations. A perusal of the books will convince any teacher of their special merits.

Applications for specimens from teachers will be attended to immediately.

B. G. PAUL & Co., Educational Publishers

12, Francis Joseph Street, G.T., MADRAS

Regd. No. M. 3473

நீங்கள் செலுத்துவது

மாதம் ஒரு ரூபாய்

உங்கள்

வார்சுகளுக்குக் கிடைப்பது

ரூ. 250-லிருந்து ரூ. 375-வரையில்

தென் இந்திய ஆசிரியர் ஐக்கிய காப்பு நிதியில்

உடனே சேருங்கள்

41, சிங்காரச்சாரி தெரு,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

கௌரவ காரியதரிசி.

Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty Street, G.T., Madras & Published by Mr. M. S. Sabhesan, M.A. For The South India Teachers' Union, 41, Singarachari St., Triplicane, Madras.